19 வது வருடத்தில்
விளம்பரம் ™
VLAMBARAM ™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm
மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338
416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்

நதி 19 பாலம் 12 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JUNE 15, 2009

# புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கோர் வேண்டுகோள்!

புலம்பெயர்ந்த தமிழ் மக்களை நோக்கி 'Tamils For Obama' என்ற அமைப்பு ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளது.

பல போராளிகள் வீரத்தோடும் தீரத்தோடும் போரிட்டு எதிரிக்கு அதிகூடிய அழிவுகளை ஏற்படுத்தி வீரமரணம் அடைந்துள்ளார்கள். தற்போது தமிழ் மக்களின் நிலைவரம் ஒரு வெற்றுத்தாளாக (Clean Slate) இருக்கிறது. தமிழர் தாயகத்திற்கான போராட்டத்தை எவ்வாறு தொடர்வது என்று தீர்மானித்தல் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் தற்போதைய தலையாய கடமை.

இப்போதுதான் இலங்கையில் இரண்டு நாடுகள் உருவாக வேண்டிய தேவை முன்னரை விட அதிகரித்துள்ளது. ஏனெனில் தற்போது இலங்கை அரசு தனது இனஅழிப்புகளை முடுக்கி விட்டுள்ளது.

இப்பொழுது புலம்பெயர் மக்கள் உடனடியாக இலங்கைக்கு வெளியில் தமிழுக்கான ஒரு அரசை (Government in Exile) அமைக்கவேண்டும்.

அ. இந்த தமிழ் அரசில் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கும் வெளிநாடுகளில் உள்ள தமிழர்களுக்கும் பிரதிநிதிகள் இருக்க வேண்டும்.

ஆ. இந்தத் தமிழ் அரசுக்கு ஒரு அரசியல் திட்டம் உருவாக்கப்படவேண்டும்.

இ. இந்த அரசிற்கு முதலில் தமது நாட்டின் விடுதலையை வேண்டி வெளிநாடுகளில் இவ்வாறு அரசாங்கங்களை அமைத்திருக்கும் நாட்டுமக்களிடம் (Tibet, Biafra & Burma) இருந்து அங்கீகாரம் பெறவேண்டும்.

ஈ. தமிழ் அரசை ஆதரிக்கும் ஒரு நாட்டை தேர்ந்தெடுக்கவேண்டும்.

உ. இத்தமிழ் அரசை கொண்டு நடத்தத் தகுதியானவர்களை தெரிவுசெய்யவேண்டும். இந்த அரசுக்குத் தலைமை வகிப்பதற்கு கம்பீரம் (Statura), சாணக்கியம் (Diplomatic) , தலைமைத்துவம் (Leadership), நிர்வாகத் திறமைகள் (Administrative Skills), எல்லையுடன் பொறுமை (Patience to some Degree), கவர்ந்திழுக்கும் தன்மை (Charisma), வசீகரம் (Charm), மற்றும் பணிவு (Humility) கொண்ட ஒருவரைத் தெரிவுசெய்ய வேண்டும்.

இந்தத் தமிழ் அரசையும் தமிழர் போராட்டத்தையும் ஆதரிக்குமாறு ஏனைய நாடுகளுக்கு நேசக்கரம் நீட்டவேண்டும்.

இப்படியொரு தமிழ் அரசை (Government in Exile) அமைப்பதற்கு கனடிய அரசின் உதவியை முதலில் நாடவேண்டும்.

இவ்வாறான முக்கிய விடயங்களையும் மேலும்பல பேச்சுத்தகைமை உடையவர்கள் (Spokes People), தமிழ் ஈழச்சிந்தனைத் தடாகம் (Tamil Eelam think tank) ஆலோசகர்கள் ( Advisors), பிரச்சார நிறுவனங்கள் (Lobbying Firm) என்பனவற்றையும் எவ்வாறு தெரிவு செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் பொப் ரேயினால் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து என உளவுத்துறை அறிக்கைகள் தெரிவிப்பதாக சிறிலங்காவின் குடிவரவு ஆணையாளர் அபயக்கோன் தெரிவித்துள்ளார். இதனால் இலங்கைக்குச் சென்ற பொப் ரே விமானநிலையத்தில் 12 மணித்தியாலங்கள் தடுத்துவைக்கப்பட்டு மீண்டும் கனடாவுக்கு திருப்பியனுப்பப்பட்டார். இலங்கை அரசு தனது கருத்துக்களையெல்லாம் அறிந்த பின்னர்தான் தனக்கு விசா தந்தது என அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் "தான் முதன்முறை இலங்கைக்கு அப்போதைய அமைச்சர் ஜிஎல் பீரிஸ் ஆல் 1999ஆம் ஆண்டு ஒரு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டேன்.



கடந்த 2002 - 2003 ஆம் ஆண்டுகளில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முயன்ற நோர்வே அமைதி நடவடிக்கைக்குழுவுக்கான ஆலோசகராகவும் செயல்பட்டேன்" என்று கூறியுள்ளார். பொப் ரே இதுவரை 10 மேற்பட்ட தடவைகள் இலங்கைக்கு பயணித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவதை திருப்பியனுப்புவதற்கு கனடாவின் இலண்டன் ஒன்ராரியோவில் வசித்துவரும் ஜராங் கணி டி சில்வா என்ற பிரபல ஊடகவியலாளர் தான் காரணமாக இருக்கலாம் என 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகை தெரிவித்துள்ளது. பொப் ரே அவர்களை இலங்கைக்குள் அனுமதித்தால் அவர் கனடா திரும்பி வந்ததும் இலங்கை பற்றி விடும்

தொடர்ச்சி 03ஆம் பக்கம்

துரித பணமாற்றுச் சேவை
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221

அடமானக் கடன் பணி செய்து கொடுப்பதே!
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM Veedu Mortgages Inc.

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

SATHYA SAIRAM DRIVING SCHOOL
• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

ONTARIO FLORISTS
திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழா, கோவில் மாலை, Funeral services ஆகியவற்றிக்கு வேண்டிய அனைத்து பூத்தேவை களும் பூர்த்தி செய்து தரப்படும்.
கோவில்களுக்கு ஒரு வருடம் மாலை பெற்றால் 3 மாதம் இலவசம்.
647.351.0799/ 647.201.3111
24 HRS. SERVICE
2625 Eglinton Ave. E, #6

REALTY EXECUTIVES
Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Office: 905-209-7500
Fax: 905-209-7501
Realty Executives GTA Ltd. Brokerage
Executive Mortgage Inc.
9889 Markham Rd. (Hwy 48), Suite 209 Markham ON L6E 0B7
Each office is independently owned and operated.

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# உங்கள் நிதியமும் பணச் சந்தையும்

பங்குச் சந்தையில் பணம் போடுபவர்களின் நம்பிக்கை அதிகரித்து வருகின்றது. சிறு சிறு வீழ்ச்சிகள் இருந்தாலும் மொத்தத்தில் கடந்த ஒருமாதமாக பங்குச் சந்தையில் விலைகள் மேல் நோக்கியே போய்க் கொண்டிருப்பதைக் காணலாம். பங்குச் சந்தை என்பது பொருளாதாரத்தில் வரவிருப்பதை முன்கூட்டியே காட்டும் கண்ணாடி என்பார்கள். அப்படியானால் பொருளாதாரத்தின் கஷ்ட காலம் விரைவில் முடிவுக்கு வரஇருப்பதாகவே பொருள். அரசாங்கங்களும் அதிக அளவில் பொருளாதார மேம்பாட்டுக்குப் பணத்தைச் செலவிடுகின்றன. கனடிய அரசும் பற்றாக்குறை நிதியை வரவுக்கு மீறிய



செலவை பொருளாதாரத்தை மேம்படுத்தக் கைக்கொண்டு வருகின்றது. இந்த வருட மே மாதம் வீட்டு விற்பனை அளவு சென்ற ஆண்டு மே மாதத்தை ஒட்டியதாக இருந்ததாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த சில மாதங்களாக புள்ளி விபரங்களின் படி வீட்டு விற்பனை அதிகரித்து வருகின்றது. 2009மே மாத விற்பனை 2008 வீட்டு விற்பனையை விட சற்றே கூடுதலாக இருந்தது. இந்நிலை தொடருமானால் பொருளாதாரம் நிச்சயம் மேம்படுகின்றது என்பதற்கு இது மேலும் ஒரு ஆதாரம் ஆக அமையும்.



**பெரி. முத்துராமன்**

இப்போது இருக்கும் சூழ்நிலையில் விலைவாசிகள் அதிகரிக்கும் என்ற பயமும் தெரிகின்றது. அதன் காரணமாக கடந்த ஒரு மாதத்தில் நீண்ட கால கடன் பத்திரங்களின் (Bonds) வட்டி வீதங்கள் அதிகரித்துள்ளன.

வங்கிகள் வீட்டுக்கடனின் மாறும் வட்டியை மத்திய வங்கியின் வட்டியை அனுசரித்தும், நிலையான வட்டியை நீண்ட கால கடன் பத்திர வட்டி வீதங்களை அனுசரித்தும் தீர்மானிக்கின்றன.

கடந்த ஒரு மாதத்தில் மாறும் வட்டி வீதங்களில் மாறுதல் ஒன்றும் இல்லை. நிலையான வட்டி வீதமோ இருமுறை கூட்டப்பட்டுள்ளது. கனடிய மத்திய வங்கியான Bank of Canada ஒரு வருடத்துக்கு வட்டி வீதத்தை மாற்றமாட்டோம் என்று இருமுறை இவ்வாண்டில் அறிவித்துள்ளனர். ஆனாலும் விலைவாசிகள் உயருமானால், அவர்கள் இந்த உறுதிமொழியைக் காப்பாற்றுவார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது. அவ்வாறு மத்தியவங்கி வட்டி வீதத்தை மாற்றினால், மாறும் வட்டிவீதங்களும் கூடத் துவங்கலாம் என்றாலும் மாறும் வட்டிவீதங்களில் 2009இல் மாறுதல் ஏதும் இருக்காது என்றே தோன்றுகின்றது.

காகிதப் பணத்தின் மதிப்பு குறையும் போதெல்லாம், தங்கத்தின் மதிப்பு உயருகின்றது. டொலர் காகிதப் பணம்தானே? அமெரிக்க டொலராயிருந்தாலும், கனடிய டொலராயிருந்தாலும் எல்லாம் காகிதப் பணம்தானே. விலைவாசிகள் உயரும் போது பணத்தின் மதிப்பு குறைகின்றது. தங்கத்தின் விலை உயருகின்றது. தங்கத்தின் விலை மிகவும் ஏறிவந்தது. ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை ஆயிரத்தைத் தொடும் நிலையில் சற்றே சரிவு நிகழ்ந்துள்ளது. அடுத்த ஆறுமாதங்களில் தங்கத்தின் விலை உயரும் என்று பல ஆய்வாளர்கள் நம்புகிறார்கள். ஆய்வுகள் பொய்யான காலமும் இல்லாமல் இல்லை.

தங்கத்தைப் பற்றி நினைக்கும்போது என் நினைவுக்கு வருவது எரிபொருள் (Gas) அல்லது பெற்றோலியப் பொருட்களின் விலைதான். அவையும் கடந்த சில மாதங்களாக மெல்ல மெல்ல மேலே ஏறி வருகின்றது. சென்ற வாரத்தில் ஒரு லீற்றர் எரிபொருளின் விலை ரொறொன்ரோ மாநகரில் ஒரு டொலரைத் தொட்டது. எப்போதெல்லாம் எரிபொருள் விலை உயருகின்றதோ, அப்போதெல்லாம் கனடிய டொலரின் மதிப்பையும் உயரக் காணலாம். அமெரிக்க டொலருக்கு எதிராக கனடிய டொலரின் மதிப்பு உயர்ந்து கொண்டு வருகின்றது. சென்ற ஆண்டில் நிகழ்ந்ததைப் போல இந்த ஆண்டிலும் கனடிய டொலரின் மதிப்பு ஏறத்தாழ அமெரிக்க டொலரின் மதிப்புக்கு இணையாக உயரும். அதாவது ஒரு அமெரிக்க டொலருக்கு ஒரு கனடிய டொலர் என்ற நிலையும் வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பொருளாதாரச் சூழ்நிலையில் உங்கள் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலை எப்படி உள்ளது. சிந்தித்துச் செயல்படுங்கள். இக்கட்டுரை ஆசிரியரிடம் ஆலோசனை பெற ஸ்கோஷிய வங்கி தொலைபேசி எண் - 416.439.3040 Ext 2010













**விளம்பரம்**
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.


**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.


Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

# புலம்பெயர்ந்த தமிழ்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அறிக்கையால் இலங்கையின் மரியாதைக்கும் தன்மானத்திற்கும் குந்தகம் விளைவிக்கும் என 'தி ஐலண்ட்' பத்திரிகையில் எழுதியுள்ளார். இலங்கையின் இந்நடவடிக்கையை கனடிய அரசும் கண்டித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 11 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் நடைபெற்றது. இக்கூட்டத் தொடரில் கலந்துகொண்ட அனைத்துலக பொது நம்பிக்கைக்கான அமைப்பு தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்களை திட்டமிட்டு மறைக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையில் கூட்டத்தினை நடத்தியிருக் கின்றது. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய்வதற்கு என ஐக்கிய நாடுகள் சபை மண்டபத்தில் இரண்டு கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

ஜெனீவாவை தளமாகக் கொண்டு இயங்கும் அனைத்துலக பொது நம்பிக்கைக்கான அமைப்பு, பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் அனைத்துலக மன்னிப்புச் சபை ஆகிய இரண்டு அமைப்புக்களின் ஏற்பாட்டிலேயே இந்த கூட்டங்கள் தனித்தனியாக இடம்பெற்றிருந்தன. இதில் அனைத்துலக பொது நம்பிக்கைக்கான அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றுவதற்கு என கொழும்பில் இருந்தும் மனித உரிமை ஆர்வலர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து கலந்துரையாடாமல் - மனித உரிமை மீறல்களை திட்டமிட்டு மறைக்கும் வகையில் - கூட்டத்தை நடத்தி முடித்திருக்கின்றனர். இதேவேளையில் அனைத்துலக மன்னிப்புச் சபையால் கூட்டப்பட்ட கூட்டத்தில் தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இக்கூட்டத்தில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட போரின்போது இடம்பெற்ற அவலங்களை விபரிக்கும் காட்சிகளும் காண்பிக்கப்பட்டன. குறிப்பாக தனது மகனை எதிர்பாராத விதமாக பறிகொடுத்து எந்தவித நீதியும் கிடையாது அரசியல் அடைக்கலம் பெற்று வெளிநாடு ஒன்றில் வாழும் ஒரு தந்தையின் உருக்கமான சாட்சியம் இக்கூட்டத்தில் பிரதிபலித்தபோது அது அங்கு கூடியிருந்தவர்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது.

அனைத்துலக மன்னிப்புச் சபையால் கூட்டப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்ட கலாநிதி சாள் கிறேவ், திருமதி. டியேற்றி மக்கோணல், பியோரா டிவாறா, திருமதி. ஓரோற்ற பன்டிற்ரேனின், ச.வி.கிருபாகரன் ஆகியோர் - தமிழ் மக்களின் சரித்திரம், கொலைகள், கைதுகள், பெண்கள் மீதான பாலியல் வன்முறை, இடப்பெயர்வு போன்ற விடங்களுடன் போர்க் குற்றங்கள் பற்றிய விடயங்களை பல ஆதாரங்களுடன் எடுத்துரைத் திருந்தனர். அத்துடன், இக்கூட்டத்தில் போரின் போது படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு ஒரு நிமிட வணக்கம் செலுத்தப்பட்டதுடன் காணாமல் போன மற்றும் படுகாயமடைந்த மக்களை நினைந்தும் மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதேவேளை இன அழிப்பு மற்றும் போரியல் குற்றங்கள் தொடர்பான சுயாதீன விசாரணைகள் தேவை என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபை மேற்கொண்ட சிறப்பு விவாதத்தில் நேபாள அரசாங்கம் சிறிலங்காவுக்கு ஆதரவாக செயற்பட்டது கண்டனத்திற்குரியது என நேபாள தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழு மற்றும் உரிமைகள் கண்காணிப்பகம் ஆகியன தமது அறிக்கையில் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அவற்றின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இன அழிப்பு மற்றும் போரியல் குற்றங்கள் தொடர்பான சுயாதீன விசாரணைகள் தேவை என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபை மேற்கொண்ட சிறப்பு விவாதத்தில் நேபாள அரசாங்கம் சிறி லங்காவுக்கு ஆதரவாக செயற்பட்டது வருந்ததக்கது. நேபாளத்தின் இந்த நடவடிக்கை போரியல் குற்றம் தொடர்பாக விசாரணைகள் தேவை என ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுவந்த தீர்மானத்தை தோற்கடித்துள்ளது. ஒரு ஜனநாயக நாடு மனித உரிமைகளை நிலைநாட்டத் தவறிய-தற்கு எதிரான குரலை இந்த நடவடிக்கை தடுத்துள்ளது. சிறிலங்காவுக்கு நேபாளம் ஆதரவு வழங்கியது கண்டனத்துக்குரியது. ஊடகத்துறை யும் ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளும் இறுதி போர் நடைபெற்ற பகுதிக்கு அனுமதிக்கப்படாத போதும், அங்கு நடைபெற்ற வன்முறைகள் தொடர்பான விசாரணைகள் தேவை என்ற தீர்மானத்தை நேபாளம் முறியடித்துள்ளது. மனித உரிமைகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்ததனால் நேபாளம் தவறிழைத்துள்ளது. இன அழிப்பு நடைபெற்றதாக அறிக்கைகள் வெளியாகிய நிலையில் சிறிலங்கா அரசாங்கம், சுயாதீன விசாரணைக் குழுவை நிராகரித்துள்ளதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். சிறிலங்கா அரசாங்கம் சில உண்மைகளை மறைக்க முற்படுகின்றது. நேபாள அரசாங்கம் எதன் அடிப்படையில் சிறி லங்காவுக்கு ஆதரவு களை வழங்கியது? அல்லது நேபாளத்தின் நிலைப்பாட்டிற்கான விளக்கம் என்ன? என்று நேபாள தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழு கேட்டுள்ளது.

இதேநேரத்தில் இணைத்தலைமை நாடுகளில் சிறி லங்காவுக்கு ஆதரவான ஆசிய நாடுகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என சிறிலங்காவுக்கான ஜப்பானின் சிறப்பு பிர-திநிதி யாசூசி அகாசியிடம் சிறிலங்காவின் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச வேண்டுகோள் விடுத்துள்ளார். மேற்குலகத்தில் இருந்து சிறி லங்கா அரசாங்கம் விலகிச் செல்லும் நடவடிக்கையாகவே இது கருதப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: யசூசி அகாசியுடன் மகிந்த ராஜபக்ச இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். அதன் போது பல அமைச்சர்களும், அதிகாரிகளும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

சிறிலங்காவுக்கு ஆதரவான பல ஆசிய நாடுகளை இணைத் தலைமை நாடுகளில் சேர்த்துக்கொள்வது தொடர்பில் சாதகமாக பரிசீலிப்பதாக யசூசி அகாசி உறுதியளித்துள்ளார். இதனைத்தொடர்ந்து, கொழும்பில் உள்ள இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுடன் யசூசி அகாசி பல சுற்றுப் பேச்சுக்களையும் நடத்தியிருந்தார். மகிந்த ராஜபக்சவின் இந்த யோசனையை எந்த நாடுகளும் நிராகரிக்கவில்லை. ஆனால், இணைத் தலைமை நாடுகளின் விரிவாக்கத்தை அவர்கள் எதிர்க்காத போதும் தற்போது இணைத் தலைமை நாடுகளில் உள்ள ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் மத்திய குழுவாக செயற்படவேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனிடையே தான் சில தகவல்களுடன் மீண்டும் கொழும்புக்கு வருவதாக யசூசி அகாசி கூறி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

**Bestway Driving school**

Get your **G2** Licence in 3 weeks (If qualified)

**பெண்கள் / ஆண்கள் welcome**

***Very respectfull instructor to ladies.***

**உங்களுடைய தாய்மொழியிலேயே கற்றுக்கொள்ள முடியும்**

**நம்பகமான சேவையும் நாணயமான கட்டணமும்**



**சாரதிப்பத்திரம் உத்தரவாதம்**

***Get your G licence through me.***

***If you fail G test, we will pay your test-booking fee.***

(some condition may apply)

**Approved instructor by M.T.O.**

For further details call ***Vicky: 647.284.5373***

**சேவைகள்: *Brampton - Mississauga - Toronto***

***Road test available in out cities***

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN

Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# வாழ்க்கை குமிழிகளை உடைத்தல்

## மனிதன் என்று நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ, அவர் குமிழி போன்றவர். தனியான எந்த தன்மையும் கிடையாது.



**சத்குரு வாசுதேவ்**

பகல் வேளையில் சூரியனைக் காண்கிறீர்கள். அது மிகவும் மகத்தான அனுபவமாக உங்களுக்கு ஆகி விடுகிறது. இரவு வேளைகளில் நீங்கள் ஆகாயத்தைப் பார்த்தால் நட்சத்திரங்கள் உங்களில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி ஒரு அனுபவத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால் சூரியனாகட்டும் நட்சத்திரமாகட்டும் இரண்டுமே ஆகாயத்தின் பிரமாண்டமான விசாலத்தோடு ஒப்பிட்டால் மிகச் சின்ன விஷயங்கள். சொல்லப் போனால் சூரியன் கூட ஒரு நட்சத்திரம் தான். ஆனால் இது பெரும்பாலும் உங்கள் புரிதலில் வருவதில்லை. உண்மையான இருப்பே அந்த ஆகாயத்தின் பிரம்மாண்டம்தான். சூரியன், நட்சத்திரங்கள், நீங்கள், நான் எல்லாம் வந்து போகிற மிகச் சிறிய நிகழ்வுகள்.

சூரியனுக்குக்கூட குறிப்பிட்ட ஆயுட்காலம் உண்டு என்று இன்று நவீன விஞ்ஞானம் உங்களுக்குச் சொல்லுகிறது. அது தன்னையே முற்றாக எரித்து தீர்த்துக் கொள்ளப் போகிறது. நீங்கள் எப்படி உங்கள் வாழ்க்கையை முற்றாக எரித்துத் தீர்த்துக் கொள்கிறீர்களோ அது சூரியனுக்கும் உண்டு. உங்களுடைய சராசரி உஷ்ண அளவு 98 டிகிரி பாரன்ஹீட் ஆக இருக்கலாம். சூரியனுடய சராசரி சிதோஷ்ணம் 98 கோடி டிகிரி பாரன்ஹீட் களாக இருக்கலாம். ஆனால் அவும் ஒரு குறிப்பிட்ட ஆயுட்காலம்தான். அதுவும் எரிந்து கொண்டிருக்கிறது. ஒரு நாள் அணைந்து விடப் போகிறது. எனவே ஸ்தூல அளவில் நீங்கள் எதைப் பார்த்தாலும் அது ஒரு சிறு நிகழ்வுதான். அந்த விசாலமும் வெற்றிடமும் தான் உண்மையான இருப்பு. அங்குதான் அந்த வெளி இருக்கிறது.

மனிதர் என்று யாரை அழைக்கிறீர்களோ அவர் ஒரு காற்று குமிழைப் போன்றவர். அதற்கென்று தனியாக தன்மை எதுவும் கிடையாது. காற்று ஏற்கனவே இருக்கிறது. தன்னைச் சுற்றி ஒரு கூட்டை அது உருவாக்கிக் கொள்கிறது. எனவே அது ஒரு தனித்தன்மை போலத் தெரிகிறது. தடித்த குமிழ், மெல்லிய குமிழ், வலிய குமிழ், பலவீனமான குமிழ், பெரியகுமிழ், சிறிய குமிழ், என்றெல்லாம் மனிதர்களைப் போலவே பல வகையான குமிழ்கள் உண்டு. மற்ற உயிரினங்களைப் போல என்றும் சொல்லாம். ஆனால் இந்த குமிழ் வெடிக்கிறபோது அந்த குமிழுக்குள்ளே இருக்கிற அந்த அம்சம் எங்கே போகிறது? காற்று அதனைத் திரும்ப வாங்கிக் கொள்கிறது. எனவே இந்தக் குமிழ் ஒரு சூட்சும அளவிலோ, பிராண அளவிலோ, மன உடல் அளவிலோ, ஸ்தூல அளவிலோ, உடல் வடிவமெடுக்கிறது. இந்த ஸ்தூல உடலை எந்த நேரம் வேண்டுமானாலும் நீங்கள் கீழே சாய்த்து விடலாம். ஓர் உடலை இரண்டாக வகுத்து விடுகிற ஆற்றல் மனிதனுக்குண்டு. மற்ற உடல்களை அப்படி வகுக்க முடியாது. எதை நீங்கள் படைப்பு, படைப்பின் மூலமென்று சொல்கிறீர்களோ, இருப்பு என்று எதைச் சொல்கிறீர்களோ, அதனால்தான் அது முடியும்.

ஆன்மீகப் பயிற்சி என்று நீங்கள் அழைப்பது இதுதான். ஆழ்நிலையில் பார்த்தால் அது ஒரு தற்கொலை. ஆனால் அது உங்கள் ஸ்தூல உடலைக் கொல்வதல்ல. ஒரு உடலை உருவாக்குவதற்கு உங்களுக்குள் இருக்கிற அடிப்படைத் தன்மைகளை நீங்கள் அழிக்கிறீர்கள். தேவையான கர்ம கட்டமைப்புகள், சூட்சும உடல்கள், பிராண உடல்கள், மனோ ரீதியான கோசங்கள், இருந்தால்தான் ஓர் உடல் சாத்தியம்.

எனவே அதை ஆன்மீகப் பயிற்சியின் மூலம் அழிக்கிறீர்கள். உங்கள் விழிப்புணர்வால், உங்கள் பயிற்சிகளால், அன்பால், உங்கள் பக்தியால், இன்னொரு உடல் எடுப்பதற்கான சாத்தியக் கூறுகளை அழிக்கிறீர்கள். இன்னொரு ஸ்தூல உடல் நிகழ்வதற்கான அடித்தளத்தை நீங்கள் சிதைக்கிறீர்கள். மீண்டும் மீண்டும் மறுசுற்றில் இந்த துவண்டல் வந்து கொண்டேயிருப்பதற்கான வாய்ப்பை நீங்கள் அகற்ற முயல்கிறீர்கள். தாயின் கருப்பை என்பது மறுசுற்று மையம் போல் ஆகிவிட்டது. எனவே அதை அகற்ற நினைக்கிறீர்கள்.


**Inner Engineering**

**Date:** 19 - 25 Aug. 2009

**Location**: Latvian Canadian Cultural Centre, 4 Credit Union Drive
Toronto, ON M4A 2N8 Canada

**Free Intro talk**: Wed 19 August - 9–10am & 6:30–7:30pm
*ALL ARE WELCOME*

**Session Info:** TIMINGS: Attendance on all 7 days is mandatory.
Please select Morning or Evening session for weekdays.
Weekend sessions are common.

**Weekday Morning Session:** 9am to 12pm OR
**Weekday Evening Session:** 6:30pm to 9:30pm
Saturday: 10am to 1pm Sunday: 8am to 5pm
**Tel.: 1-866-424-4742**
website: www.ishafoundation.org www.ishayoga.org



**A1 கொழும்பு**

போட்டோ ஸ்ருடியோ & விடியோ
2 பாஸ்போட் $5.00 2 லாண்டட் காட் $5.00
2 சிற்ரிசன் $5.00 - 2 அனைத்துவிதமான ஐ. டி.$5.00
3 - 5X7 ஸ்ருடியோ போட்டோ $15.00
From: அல்பத்துடன் போட்டோ PACKAGES
25 - 5X7 பிறந்த நாள் போட்டோக்கள் $50.00
50 - 5x7 முதல் நன்மை $100.00
50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா $100.00
100 - 5x7 திருமணவிழா $200.00
10- 5x7 Graduation போட்டோக்கள் பாடசாலையில் $50.00
2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD
UNIT 3 LOWER LEVEL, Web: www.tamilsyellowpeages.com
Mobile: 416-752-4444 Tel: 416-755-2333



**என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்**



**KENNEDY / SHEPPARD** New Condo. 1000 sq.ft.
2 bedroom + Den. Low maintenance.

**House with Mechanic shop Scarborough**

**Church for sale Toronto**

*Buy low, Sell high* - *40 years* *Low Interest*
**வங்கியின் பணத்தில் முதலீடு - 5 வருடத்தில் Cash out**
*5 year plan 3.9% interest* **Power of Sale**
***Properties with Tenant's* Pay the cost**
**What's your Risk?**

*We look after* **seniors over 70 years** *peaceful life.*

**Country Style**
*Coffee shop - Oshawa*
*Good Income*

**வீடும் வியாபாரமும் *Business Zoning***
**Future long term Investment**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு
அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep.)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51

# இரு இடங்களில்

# துரித பணமாற்றுச் சேவை

# பொன்விழா கண்ட ஸ்தாபனம்

## இதில் 18 வருடங்கள் கனடாவில்

## கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?



தமிழ் மக்கள் இதயங்களில்
பணமாற்றுச் சேவையில்
இடம் பிடித்தவர்கள்

## மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

**3228 EGLINTON AVE.EAST, SUITE #3**
**SCARBOROUGH, ON. M1J 2H6**
தொலைபேசி எண்: **416-267-8221**

**3351 MARKHAM ROAD, SUITE #109**
**(Markham & Steeles)**
**SCARBOROUGH, ON. M1X 0A6**
தொலைபேசி எண்: **416-321-8221**

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51

# “டுவென்டி - 20” உலக கோப்பை திருவிழா

## விளையாட்டுத் தகவல்கள் 262

ஒரே ஓவரில் யுவராஜ் 6 சிக்சர்கள் விளாசியது, ஜிம்பாப் வேயிடம் அவுஸ்திரேலியா வீழ்ந்தது, 57 பந்தில் கிறிஸ் கெய்ல் 117 ரன்கள் விளாசியது, பைனலில் கடைசி ஓவரில் இந்திய அணி, பாகிஸ்தானை வீழ்த்தி, கோப்பை வென்றது போன்ற “திரில்” விடயங்கள் முதலாவது “டுவென்டி - 20” உலக கோப்பை தொடரில் அரங்கேறின.

இதே போன்றதொரு பரபரப்பான தருணங்களை 2வது “டுவென்டி - 20” உலக கோப்பை தொடரிலும் ரசிகர்கள் அனுபவிக்க காத்திருக்கின்றனர். கடந்தமுறை கோப்பை வென்ற உற்சாகத்தில் தோனி தலைமையிலான இந்திய அணி, இம்முறை களமிறங்குகிறது.

கடந்த 2007ல் ஐ.சி.சி., சார்பில் முதலாவது “டுவென்டி - 20” உலக கோப்பை தொடர் தென் ஆபிரிக்காவில் நடத்தப்பட்டது. இதில் சச்சின், கங்குலி, டிராவிட் உள்ளிட்ட மூத்த வீரர்கள் நீக்கப்பட்ட போதும், தோனியின் இளம் படை சாதித்து காட்டியது. பாகிஸ்தானுடனான பைனலை எளிதில் மறக்க முடியாது. ஜோகிந்தர் சர்மா வீசிய கடைசி ஓவரின் மூன்றாவது பந்தை மிஸ்பா தூக்கி அடிக்க, ஸ்ரீசாந்த் அப்படியே “லபக்” செய்ய, இந்திய அணி கோப்பை வென்று அசத்தியது.

பாக்கிஸ்தான், பரிதாபம்: கடந்த முறை பைனலுக்கு முன்னேறிய பாகிஸ்தான் அணி இம்முறை பெரும் குழப்பத்தில் உள்ளது. முகமது ஆசிப், சோயப் அக்தர் இல்லாமல் தவிக்கிறது. கேப்டன் யூனிஸ் கான், “அதிரடி” அப்ரிதி, சோகைல் தன்வீர் போன்றவர்கள் எழுச்சி கண்டால் மட்டுமே தேற முடியும்.

உள்ளூர் சாதகம்: இங்கிலாந்து அணியில் ஆல்-ரவுண்டர் பிளின்டாப் இல்லாதது பின்னடைவு. ஆனாலும் போட்டிகள் சொந்த மண்ணில் நடப்பதால், உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் அசத்தலாம். இலங்கை அணி அதிரடி ஜெயசூர்யா, முரளிதரன், மலிங்காவை தான் சார்ந்து உள்ளது. இவர்கள் ஐ.பி.எல்., தொடரில் எதிர்பார்த்த அளவுக்கு பிரகாசிக்கவில்லை. இதற்கு உலக கோப்பை தொடரில் பரிகாரம் தேட முயற்சிக்கலாம். கேப்டன் கெய்ல் அதிரடி காட்டினால் வெஸ்ட் இண்டீஸ் அணியும் வெற்றி வாகை சூடலாம். நியூசிலாந்து, வங்கதேச அணிகளும் அதிர்ச்சி தரலாம். பெயர் அளவுக்கு அயர்லாந்து, ஸ்காட்லாந்து, நெதர்லாந்து அணிகளும் பங்கேற்கின்றன.

கெய்ல் “ஒன் மேன் ஆர்மி”: “டுவென்டி - 20” உலக கோப்பை அரங்கில் ஒரு இன்னிங்சில் அதிக ரன்கள் குவித்த வீரர்கள் வரிசையில் வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் கிறிஸ் கெய்ல் உள்ளார். கடந்த 2007ம் ஆண்டு தென் ஆபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் அதிகபட்சமாக 117 ரன்கள் எடுத்தார். தவிர “டுவென்டி - 20” உலக கோப்பை தொடரில் சதம் கடந்த ஒரே வீரர் என்ற சாதனை படைத்துள்ளார். இவரை தொடர்ந்து தென் ஆபிரிக்காவின் கிப்ஸ் (90*) மற்றும் கெம்ப் (89*) உள்ளனர். இந்தியா சார்பில் காம்பிர் (75), யுவராஜ் (70), சேவக் (68) ஆகியோர் உள்ளனர்.

மெக்கலம் அதிரடி: “டுவென்டி - 20” உலக கோப்பை வரலாற்றில் அதிக சிக்சர் விளாசிய வீரர்கள் வரிசையில் நியூசிலாந்தின் பிராண்டன் மெக்கலம் முதலிடத்தில் உள்ளார். இதுவரை 6 போட்டியில் விளையாடியுள்ள மெக்கலம், 13 சிக்சர் விளாசியுள்ளார். இவரை தொடர்ந்து இந்தியாவின் யுவராஜ் (12), வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் கெய்ல் (10) ஆகியோர் உள்ளனர்.

உமர் குல் துல்லியம்: “டுவென்டி - 20” உலக கோப்பை அரங்கில் அதிக விக்கெட் வீழ்த்திய வீரர்கள் வரிசையில் பாகிஸ்தான் வீரர் உமர் குல் முதலிடத்தில் உள்ளார். இதுவரை 7 போட்டியில் விளையாடி உள்ள குல், 13 விக்கெட் வீழ்த்தி உள்ளார். இந்தியாவின் ஆர்.பி. சிங் 12 விக்கெட்டுகளுடன் 2வது இடத்தில் உள்ளார்.

இலங்கை முதலிடம்: ஐ.சி.சி., “டுவென்டி - 20” உலக கோப்பை அரங்கில் ஒரு இன்னிங்சில் அதிக ரன்கள் குவித்த அணிகள் வரிசையில் இலங்கை அணி முதலிடம் வகிக்கிறது. கடந்த 2007ம் ஆண்டு கென்யாவுக்கு எதிராக ஜோகனஸ்பர்க்கில் நடந்த போட்டியில் 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 260 ரன்கள் குவித்தது.

ஹைடன் அசத்தல்: “டுவென்டி - 20” உலக கோப்பை அரங்கில் அதிக ரன்கள் சேர்த்த வீரர்கள் வரிசையில் அவுஸ்திரேலிய வீரர் ஹைடன் முதலிடத்தில் உள்ளார். இதுவரை 6 போட்டியில் விளையாடியுள்ள இவர், 4 அரைச-தம் உட்பட 265 ரன்கள் குவித்து உள்ளார். இரண்டாவது இடத்தில் இந்தியாவின் காம்பிர் (227), மூன்றாவது இடத்தில் பாகிஸ்தானின் மிஸ்பா (218) உள்ளனர்.

20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி
இரண்டாவது 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் 5ஆம் தேதி முதல் 21ஆம் தேதி வரை நடைபெறுகிறது. போட்டியில் நடப்பு சாம்பியன் இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் உள்பட 12 அணிகள் கலந்து கொள்கின்றன. அவை 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் தலா 2 அணிகள் வீதம் மொத்தம் 8 அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறும். பின்னர் இந்த 8 அணிகளும் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு தலா ஒரு முறை மோதிய பிறகு அதில் இருந்து 4 அணிகள் அரைஇறுதிக்கு முன்னேறும்.

### முடிவு ஏமாற்றமளிக்கிறது -பாண்டிங்

டுவென்டி - 20 உலகக் கோப்பை போட்டி முடிவு ஏமாற்றமளிக்கிறது என அவுஸ்திரேலிய அணிய-ின் கேப்டன் ரிக்கி பாண்டிங் கருத்து தெரிவ-ித்துள்ளார். ஒருதின கிரிக்கெட் போட்டியில் உலக சாம்பியனாகத் திகழும் ஆஸ்திரேலியா, 20 ஓவர் போட்டியில் முதல் சுற்றுடன் வெளியேறியது. இது, உலக கிரிக்கெட் வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. டிரென்ட்பிரிட்ஜில் திங்கள்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கையிடம் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியுற்றதால், சூப்பர்-8 வாய்ப்பை முற்றிலும் இழந்தது அவுஸ்திரேலியா.

போட்டிக்குப் பின்னர் பாண்டிங் கூறியது: மேற்கிந்தியத் தீவுகளைத் தொடர்ந்து இலங்கையிடமும் தோல்வியுற்றது மிகுந்த ஏமாற்றமளிக்கிறது. அதற்கான காரணத்தை விளக்க அவசியமில்லை. அதிகமான தவறுகளை இழைத்தோம். அதேசமயம் இலங்கை அணியின் மிதவேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயல்பட்டனர். எமது முக்கிய பேட்ஸ்மேன்களை அவர்கள் வெளியேற்றியதால் ரன் குவிக்கமுடியாமல் போனது. சுழற்பந்து வீச்சாளர்களைக் கொண்டு இலங்கையைச் சமாளித்துவிடலாம் என நினைத்தோம். ஆனால் நிறைவேறவில்லை என்றார் பாண்டிங். இவர் 25 ரன்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

ஆஸி. 159-9வி: டிரென்ட்பிரிட்ஜில் நடந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 159 ரன்கள் எடுத்தது. தொடர்ந்து விளையாடிய இலங்கை அணி 19 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டி வெற்றி பெற்றது. இலங்கை அணியின் மென்டிஸ் (3-20), மலிங்கா (3-36) ஆகியோர் சிறப்பாகப் பந்துவீசி அவுஸ்திரேலியாவின் ரன் குவிப்பைக் கட்டுப்படுத்தினர். இலங்கை தொடக்க ஆட்டக்காரர் தில்ஷான் அதிரடியாக விளையாடி 32 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் 53 ரன்கள் எடுத்து வெற்றிக்கு அடித்தளமிட்டார். சங்கக்கார பொறுப்புடன் விளையாடி 40 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 54 ரன்கள் எடுத்தார்.

### டுவென்டி - 20 உலகக் கோப்பை கிரிக்கெட்: ஒரு ரன்னில் தென் ஆப்பிரிக்கா வெற்றி

லண்டனில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற டுவென்டி - 20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்தை ஒரு ரன் வித்தியாசத்தில் தோற்கடித்து “டி” பிரிவில் முதலிடம் பிடித்தது தென் ஆப்பிரிக்க அணி.

இப்பிரிவில் இடம்பெற்றிருந்த ஸ்காட்லாந்து 2 தோல்விகளுடன் ஏற்கெனவே வெளியேறிய நிலையில் பிரிவில் யாருக்கு முதலிடம் என்பதைத் தீர்மானிக்கும் போட்டியாக இது அமைந்திருந்தது. முதலில் பேட்டிங் செய்த தென் ஆப்பிரிக்க அணி திட்டமிட்டபடி ரன்குவிக்க முடியாமல் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 128 ரன்களைச் சேர்த்தது. அடுத்து ஆடிய நியூஸிலாந்து அணி 5 விக்கெட்டுகளை இழந்து 127 ரன்களைச் சேர்த்து தோல்வியைத் தழுவியது. மிகவும் பரபரப்பாக முடிவுற்றது இப்போட்டி. கேப்டன் பிரெண்டன் மெக்கல்லமின் சிறப்பான ஆட்டத்தால் ஒரு கட்டத்தில் எளிதாக வெற்றி காணும் நிலையை நியூஸிலாந்து பெற்றிருந்தது. ராஸ் டெய்லரும் - மெக்கல்லமும் 3-வது விக்கெட்டுக்கு 56 ரன்களைக் குவித்து வெற்றி நம்பிக்கை அளித்தனர். ஆனால் வான்டெர் மெர்வ் வீசிய 17-வது ஓவரின் கடைசிப் பந்தை இறங்கி விளாச முற்பட்ட மெக்கல்லம் ஸ்டம்பிங் செய்யப்பட்டு ஏமாற்றமடைந்தார். அதுவே போட்டிக்கு திருப்பமாக அமைந்தது. 6 பவுண்டரிகளுடன் 54 பந்துகளில் 57 ரன்களைக் குவித்தார் மெக்கல்லம். அதைத் தொடர்ந்து கடைசி 3 ஓவர்களில் 35 ரன்களைச் சேர்க்க வேண்டிய நெருக்கடியை பெற்று, கடுமையாகப் போராடிய நியூஸிலாந்து அணி ஒரு ரன்னில் தோல்வியுற வேண்டியதாயிற்று. வான் டெர் மெர்வ் ஆட்ட நாயகன் விருதைப் பெற்றார்.

சுருக்கமான ஸ்கோர்: தென் ஆப்பிரிக்கா 128-7வி (காலிஸ் 24, ஸ்மித் 33, டுமினி 29, வில்லியர்ஸ் 15, பட்லர் 2-13).
நியூஸிலாந்து 127-5வி (மெக்கல்லம் 57, டெய்லர் 22, ஓரம் 24, வான் டெர் மெர்வ் 2-14).

### “சூப்பர் 8” மோதல் தொடக்கம்

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் டுவென்டி - 20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது. அதாவது முதல் சுற்றிலிருந்து 8 அணிகள் சூப்பர்-8 லீக் சுற்றுக்கு முன்னேறியுள்ளன. இந்த அணிகள் பிரிவு இ, பிரிவு எ஁ப் என 2 பிரிவாக பிரிக்கப்பட்டு ரவுண்ட் ராபின் லீக் முறையில் விளையாடுகின்றன. அப் போட்டிகள் வியாழக்கிழமை (ஜுன் 11) முதல் ஜுன் 16-ம்தேதி வரை நடைபெறுகின்றன. இவற்றில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறும்.

சாதனை தொகைக்கு விலை போகும் ரொனா-ால்டோ இங்கிலாந்து கால்பந்து கிளப் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கு விளையாடும் போர்ச்சுக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவை தங்கள் அணிக்கு கொடுத்து விடுமாறு கோரி ஐரோப்பிய கால்பந்து கிளப் ரியால் மேட்ரிட் பெரிய தொகையை அளிக்க முன் வந்துள்ளது.

நடப்பு கால்பந்து உலகில் மிகப்பெரிய வீரராக கருதப்படும், மான்செஸ்டர் யுனைடெட் சாதனை வீரருமான கிறிஸ்டியானோ ரொனால்டோவை 80 மில்லியன் பவுண்டுகள் தொகை கொடுத்து வாங்க ரியால் மேட்ரிட் முடிவு செய்துள்ளது. மேலும் இந்த தொகைக்காக எந்தவித நிபந்தனையையும் ரியால் மேட்ரிட் கிளப்



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 22ஆம் பக்கம்

S.A.P HELPING HANDS உதவும் கரங்கள்
மக்கள் சேவை சதாசிவ சேவை

மூத்தோருக்கான சேவைகள்
- இருப்பிட வசதிகள் ஒழுங்கு செய்தல்
- சமூக நல பணிமனைக்கு அழைத்துச் செல்தல்
- கோவில் / தேவாலயம் அழைத்துச் செல்தல்
- வைத்தியரிடம் அழைத்துச்செல்தல்
- கடைகளுக்கு அழைத்துச் செல்தல்
- எல்லா வகையான படிவங்களும் நிரப்புதல்
- கோடைகால சுற்றுலா

சதாசிவா - 416.454.2810
ASATHN@hotmail.com

மற்றைய சேவைகள்
> All Mortgage / Refinance
> Personal Business Loan
> All kind of Insurances
> Line of Credits
> Bankruptcy
> Accident Claims

இலவச ஆலோசனைகளும், ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

# அழகான கதை சொல்லும் அடக்கமானக்கடன்

அமெரிக்க பொருளாதார வீட்டுச்சந்தையைப் பற்றிய தொடர்ந்து விரும்பத்தகாத தகவல்களையே ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன. அமெரிக்க மக்களின் கண்ணிற்கும் காதுக்கும் மகிழ்ச்சியற்றதாகவே உள்ளது. இது இன்றைய அமெரிக்க பொருளாதார நிலை.



ஆனால், கனடிய நிதி நிறுவனங்களின் நிலைமைகளோ வேறாக உள்ளன. குறைந்த வட்டிவீதம். இதனால் வீட்டுச்சந்தையில் புதிதாக வீடு வாங்குபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கின்றது.

கனடாவில் வாங்கப்படும் வீடுகளில் 80% வீட்டுகளிற்குரிய காப்புறுதி CMHC (Canada Mortgage and Housing Corporation) மற்றும் Genworth நிறுவனங்களே செய்கின்றன. 20% இற்கு அதிகமாக முதலீடு செய்தால் காப்புறுதி பெறத்தேவையில்லை என்பது விளம்பர வாசகர்கள் அறிந்ததே.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 300**

கடந்த வருடத்தின் (2008) இறுதி 4 மாதங்களில் இந்த வருடத்தின் முதல் மூன்று (செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் 2008, ஜனவரி, பெப்ரவரி, மார்ச் 2009) மாதங்களில் வீட்டு வியாபாரம் எதிர்பாராத மந்த நிலைமையை அடைந்ததே. தொடர்ச்சியான வட்டி வீத இறக்கம் 2009ஆம் ஆண்டை ஒரு சீரான ஆண்டாக வைத்திருக்கலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக இந்த மாதம் கூடிய மத்தியவங்கியின் ஆளுனர்கள் மத்திய வங்கியின் வட்டி வீதத்தில் எதுவித மாற்றமும் ஏற்படுத்தாமல் 0.25% ஆக விடப்பட்டுள்ளது. இதனால் நிதி நிறுவனங்களினது முதன்மை வட்டி வீதம் (Prime Rate) 2.25% ஆகவே மாறாமல் காணப்படுகின்றது.

கடன் சரித்திரமும், ஒழுங்கான வருமானமும் பெறும் ஒருவர் இலகுவாக அடமானக்கடன் பெறுவதுடன் இன்றைய காலகட்டத்தில் சிறந்த அடமான வட்டி வீதத்தையும் பெறக்கூடியதாக உள்ளது.

**2006ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி;**
கனடிய மக்களில் 68% வீதமானவர்கள் சொந்த வீட்டை வைத்துள்ளார்கள். இதில் 60% ஆனவர்கள் வீட்டிற்குரிய அடமானக்கடனை வைத்துள்ளார்கள். அதாவது 40% ஆன வீட்டு உரிமையாளர்களிற்கு வீட்டு அடமானக் கடன் கிடையாது. அதாவது கடனை செலுத்தி முடித்துள்ளார்கள்.

எதிர்பார்க்கப்பட்டது போல், 40வருட அடமானக்கடனைத் திருப்பிக்கொடுக்கும் காலத்தையும், (Amortization) பூச்சியத்துடனான (Zero downpayment) முதலீடுடனான அடமானம் பெறும் என்ற சலுகைகள் நீக்கியதால் வீட்டு வியாபாரத்தில் பெரிதான பாதிப்பும் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை என்று தெரிய வருகின்றது.

எனவே ஒருவர் வீடு வாங்குவதற்கு ஆகக்குறைந்தது 5% முதலீடு தேவைப்படுகின்றது. ஆகக்கூடிய கடன் கொடுக்கும் காலம் (Amortization Period) 35 வருடமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

ஆனால் கனடிய மக்கள் எதிர்பார்த்தது போல, வீட்டின் விலையில் பாரிய வீழ்ச்சி இதுவரை ஏற்படாததால், நடுநிலையில் இருந்து வீடு வாங்குபவர்களை இப்பொழுது சந்தையில் காணக்கூடியதாக உள்ளது. முக்கியமாக முதல் தடவை வீடு வாங்குபவர்களை அதிகமாகச் சந்தையில் காணக்கூடியதாக உள்ளது. இதனால் $400,000 இற்கு உட்பட்ட வீடுகள் கடந்த இருமாதங்களாக அதிகமாக விற்கப்படுவதை காணக்கூடியதாக உள்ளது. இதன் தொடர்ச்சியாக 2009ஆம் ஆண்டு மே இல் விற்கப்பட்ட வீடுகளை விட அதிகமாகக் காணப்படுகின்றது.

தொடர்ச்சி 24ஆம் பக்கம்


# HomeLife GTA Realty Inc., Brokerage*

**Independently owned & operated**
“கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது”

1711 McCowan Rd. #206, Toronto
Tel.: **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga
Tel.: **905.712.2666**



**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

## New Condo. Available in Downtown Toronto

- *Highrise Condo. Building*
- *2 Bedrooms*
- *2 Washrooms*
- *1 Parking*
- *1 Locker*
- *Balcony*
- *Hardwood / Ceramic Floor*
- *Loft (2 Floors)*
- *Higher Floor*
- *Quick Closing*
- *Spadina & Front - Toronto*
- *Special Price Only $385,000 (less than $375/sqft)*

## Semi-detached House for Sale

- *Morningside & Sheppard*
- *3 Level Back split*
- *4 Bedrooms*
- *2 Full washrooms*
- *Good for extended Family*
- *Asking Only$219,900 (Better than renting)*

## Condo. for Rent

- *Wellesley & Jarvis*
- *1 + Den Bedroom*
- *Only 1 year old building*
- *24 hrs. security*
- *Indoor swimming pool, exercise room*
- *Available July /August*



**Nantha Aiyadurai**
**Cell: 613 850 9931**

COLDWELL BANKER
COBURN REALTY

**கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்**




Relocation Service
OTTAWA>>><<<GTA



**நந்தா ஐயாத்துரை**

**Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1**

# நாடகக் சுவைகள்

நாடகத்திலே உணர்ச்சிகளை உடம்பினால் நடித்துக் காட்டுவது மெய்ப்பாடு எனப்படும். அவற்றைத் தொல்காப்பியர்,

*நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று*
*அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப* (தொல். பொருள் 247)

என்று எட்டுச் சுவைகளாகத் தொகுத்துக் கூறுவர். இவை ஒவ்வொன்றும் நான்கு நான்கு வகைப்பட்டு மொத்தம் முப்பத்திரண்டாக வரும் என்று கூறி அவற்றையும் வகுத்துக் காட்டியுள்ளார்.

கல்வியிற் சிறந்த கம்பர் அவற்றையெல்லாம் நன்கு அறிந்திருந்தார். உண்டாட்டுப் படலத்தில் கள் குடித்த ஒரு பெண்ணின் வெகுளியை,

*கூற்றுறள் நயனங்கள் சிவப்ப கூன் நுதல்*
*ஏற்றிவாள் எயிறுகள் அதுக்கி இன்தளிர்*
*மாற்றரும் கரதலம் மறிக்கும் மாதொரு*
*சீற்றமாம் அவிநயம் தெரிக்கின் றாரினே*
(உண்டாட்டுப் படலம் 21)

என்று கூறுமுகத்தால், ஒரு நடிகருக்கு சீற்றத்தை நடித்துக் காட்ட வேண்டிய அவிநயத்தை விளக்குகின்றார்.

அதுபோலவே அசோகவனத்தில் சீதையின் துன்பத்தையும் பல கவிதைகளில் நாடகக் காட்சியாக்குகின்றார் கம்பர். அவற்றில் ஒன்று இது:

*விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்*
*எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை எண்ணித்*
*தொழுதல் சோருதல் துளங்குதல் துயர் உழந்து உயிர்த்தல்*
*அழுதல் அன்றிமற்று அயல் ஒன்றும் செய்குவ தறியாள்.*
(சுந்.கா. காட்சிப் படலம் 5)



இவ்விதம் எல்லாவகைச் சுவைகளுக்கும் இலக்கணமாக அமையும் கவிதைகள் கம்பராமாயணத்தில் ஏராளம் இருக்கின்றன.

## பாத்திர இயல்புகள்

இனி, சுவைகளைக் காட்டும் பாத்திரங்கள் எப்படித் தோன்ற வேண்டும் என்பதிலும் புலவர் மிகுந்த கவனஞ் செலுத்தியிருப்பதையுங் காணமுடிகிறது. இராமனின் ஏற்றம், இராவணனின் தோற்றம் போன்றவற்றை யெல்லாம் மிக எடுப்பாக வருணிப்பார். பிரதான பாத்திரங்க ளன்றி, சிறு பாத்திரங்களிலும் அதிக கவனங் காட்டுவார். மந்தரை கைகேயிடம் வரும் காட்சியை,

*தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினாள்*
*ஊன்றிய வெகுளியாள் உளைக்கும் உள்ளத்தாள்*
*கான்றெரி நயனத்தாள் கலிக்கும் சொல்லினாள்*
*மூன்றுல கினுக்குமோர் இடுக்கண் மூட்டுவாள்*
(அ.கா.மந்தரை சூழ்ச்சிப் படலம் 51)

என்றும் சூர்ப்பணகை இராமனை மயக்கவரும் தோற்றத்தை,

*பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க*
*செஞ்செவிய கஞ்சம்நிகர் சீறடிய ளாகி*
*அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்*
*வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்*
(ஆர.கா. சூர்ப்பணகைப் படலம் 31)

என்றும் விளக்கும் விதங்கள் அப்பாத்திரங்களைத் தாங்கி நடிக்க வல்லவர்களுக்கு நல்ல விருந்தாக மட்டுமன்றி, பாடமாகவும் அமைகின்றன. முன்னைய பாடலில் மூச்சாக நிற்கும் வல்லோசைகளும் பின்னையதிற் குலுக்கி மினுக்கும் மெல்லோசைகளும் பாத்திரங்களின் குணவியல்புகளை வெளிப்படையாகவே உணர்த்தி நிற்கின்றன.

**தொடரும்**



**கவிஞர் வி. கந்தவனம்**



# காக்கை பாடினியார்



பறவைகள் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒருவிதம். மயில், கிளி, அன்னம், நாகணவாய் (மைனா), மரங்கொத்தி, தேன்சிட்டு, குயில், தூக்கணாங்குருவி, காகம் எனப் பலவித பறவைகள். கார் மேகம் கண்டதும் தோகை விரித்தாடும் மயில். கிளிமொழி என்று பெண்களின் குரலுக்கு உவமை கூறப்படும் கிளி. நீரைப்பிரித்து பாலை உண்ணும் அன்னம். கூடிக்குலவும் மைனா. அழகாக காணப்படும் மரங்கொத்தி. ஒலி எழுப்பி பறந்து திரியும் தேன்சிட்டு. அழகாக கூடுகட்டும் தூக்கணாங் குருவி. இனிய குரலில் கூவும் குயில். உறவோடு உண்ணும் காக்கை. இவற்றைக் கண்டு மகிழாதார் யாருளர்.

கரிய நிறமுடைய காக்கையை விரும்புவார் யாராவது உளரா என்றால் யாருமிலர் என்றே கூறவேண்டும். வெளித் தோற்றத்தை கொண்டு ஒருவரை மதிப்பீடு செய்யக்கூடாது என்பதற்கு காகம் உதாரணமாக விளங்குகின்றது. ஏனெனில் காக்கையிடம் பல சிறந்த பண்புகள் காணப்படுகின்றன. அது ஒரு சமூக சேவகன் -- தோட்டி. அழுக்குகளை உண்டு சூழலை சுத்தமாக்குகின்றது. தன் இனத்தோடு கூடி ஒற்றுமையாக உண்டு மகிழ்கின்றது. காணமல் புணர்கின்றது. குயிலின் முட்டைக்கு உயிர் அளிக்கின்றது. விருந்து வர கரைந்து தெரிவிக்கின்றது. ‘காக்கைச் சிறகினிலே நந்தலாலா உன்தன் கரியநிறம் தோன்றுதையா நந்தலாலா’ என்று அதற்கு தெய்வீகத் தன்மையை அளித்தவர் பாரதியார். ஒற்றைக் கண்மணி உடைய காக்கை மற்றைய பறவைகளுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாய், நற்துணையாய் அற்புதமானதாக விளங்குகின்றது. பாட்டியின் வடையை கவர்ந்து சென்றது கள்ளத்தனத்தைக் காட்டும் அதனோடு தொடர்புடைய கதை. எனவே பாராட்டிற்கு உரிய பறவை காக்கை எனலாம்.

மயில், குயில், கிளி இவற்றைப்பாடுவது புலவரிடையே வழக்கமாய் உள்ளது. ஆனால் அழகற்ற காக்கையை ஒரு புலவர் பாடினார். அவர்தான் நச்செள்ளையார் என்ற பெண்பாற் புலவர். ரசிகத் தன்மைமிக்க அக்காலத் தமிழர் அவருக்கு காக்கை பாடினியார் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். இது ஒரு காரணப் பெயர். இதுதான் குறுந்தொகையில் உள்ள அப்பாடல்

திண் தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணல் வெஞ் சோறு
ஏழு கலத்து ஏந்தினும் சிறிது என் தோழி
பெருந் தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே.

காதலன் உறுதியாக வருவான் எனக் காக்கை கரைந்து செய்தி தெரிவித்ததினால் காதலிக்கு உற்சாகமும், உவகைப் பெருக்கும் ஏற்பட்டன. இதனால் அவளது உடல் நிலை சீராகி பழைய நிலையை எய்தினாள். இத்தகைய நல்ல செய்தியை தெரிவித்து பேருதவி புரிந்த உபகாரியான காக்கைக்கு சிறந்த, நெய் கலந்த சோற்று விருந்து படைத்தலே (அவளது), காதலியின் நன்றிக்கடனாகும். தோழிகள் சொல்லியும் சிந்தை தெளியாத காதலிக்கு காக்கை கரைந்து கூறிய செய்தி களி பேருவகையை உண்டு பண்ணியது உண்மையேயாம்.

சனியன் ஏறும் காக்கையே என்று சபித்தாலும் அதனிடமுள்ள இனிய பண்புகள் மனிதருக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து அதனை கனிவுடன் நோக்க வைக்கின்றன.

‘ஆகாரம் உண்ண எல்லோரும் ஒன்றாக அன்போடு ஓடிவாங்க, கா! கா!’ என்று காகம் கரைவது உண்ணப்படும் உணவு சாவாமருந்து எனினும் உள்ளிருந்து தனித்து தான் மட்டும் உண்ணுதல் தவிர்க்கப்பட வேண்டும் என்பதையே உணர்த்துகின்றது. ‘விருந்தோடு உண்’ என்ற ஔவை வாக்கை மெய்ப்பிக்கின்றது.



**நா. க. சிவராமலிங்கம்**




SMILE....

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days



## இலவசம்! இலவம்! இலவசம்!

## Free Accident Claim Services

### *Motor Vehicle Accident*

• வாகன விபத்துக்கு உள்ளானீர்களா?
• உங்கள் வாகன விபத்துக் கோரிக்கையை முற்றிலும் இலவசமாக செய்து கொள்ள விரும்புகிறீர்களா (Free Accident Claim)
• வாகன விபத்தில் வலி, வருத்தம், காயம், உடல் உபாதை அல்லது மனநல பாதிப்பு ஏற்பட்டதா?
• வாகன விபத்தினுள், விபத்து உங்கள் தவறானாலும் அல்லது உங்கள் தவறாக இல்லாவிட்டாலும் பெரும் தொகை பணத்தினை நட்ட ஈடாக பெற விரும்புகிறீர்களா?
• பல வருட அனுபவம் மிக்க எங்கள் வழங்கறிஞர்களின் (Lawyers) இலவச ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்
• Licenced and Excellent Physiotherapy, Doctors, Lawyers & Assessment Services.



## *Legal Defence Team Inc.*

*220 Duncan Mills Dr.*
*Suite 519, Toronto, ON (Donmills &Sheppard)*

**Call: Suresh : 416-276-0059**

[24 மணிநேர தமிழில் சேவை]

**Fax: 416-385-1804**

***Our Services:*** Scarborough, Markham, Mississauga, Richmond Hill, Aurora, New Market, Brampton, Pickering

• உங்களுக்கு உதவுவதே எங்கள் நோக்கம். பிறரிடம் சென்று ஏமாறு முன் எங்களை ஒரு முறை அழைத்து ஆலோசனை பெறுங்கள்.
• எமது அனைத்து சேவைகளும் 100% சட்ட ரீதியானவை.



## கடன் பிரச்சினையில் தவிக்கிறீர்களா?



• கடன் சுமை தாங்க முடியவில்லையா?
• உங்கள் Credit பழுதாகிவிடும் என்ற கவலையா?
• உங்கள் வீடு, வாகனம், குழந்தைகளின் கல்வி என்பன பறிபோய் விடும் என்று ஏக்கமா?
• கவலை வேண்டாம். ஒருமுறை எங்களை அழைத்து இலவச ஆலோசனை பெற்ற பின் உங்கள் முடிவை எடுங்கள்.

### இதோ உங்களுக்கு உதவ சில சட்டரீதியான வழிவகைகள்

***1. Consumer Proposal:*** உங்கள் Credit ஐயும் வீட்டையும் வாகனத்தையும் இதர சொத்துக்களையும் பாதுகாத்தபடியே உங்கள் கடனை சட்டரீதியாக 60% த்தால் குறைத்து மிகுதி 40% த்தை மட்டும் மாதாந்தம் மிகச்சிறு தொகையாக கட்ட வழிசெய்தல்.

***2. Debt Consolidation:*** உங்கள் அனைத்து கடன்களையும் ஒரு கடனாக்கி மாதாந்தம் மிகச் சிறிய வட்டியுடன் சிறு தொகையாக கட்ட வழி செய்தல். இதன் மூலம் உங்கள் Credit ஐ பாதுகாத்த படியே பெரும்பாலான வட்டிப் பணத்தை நீங்கள் சேமிக்க முடியும்.

***3. Bankruptcy:*** அனைத்துக் கடன்களிலிருந்தும் 100% சட்டரீதியாக விடுபட உதவுதல்.

***4. Line of Credit:*** ( Mini Score 680 and Min 2 years credit a must)

***5. Criminal Problems, Traffic Ticket Problems***

Call:சுரேஸ் - **416-276-0059** 24 hrs. Hotline

**Fax: 416-385-1804**

# குருதிச் சுற்றோட்ட நிகழ்வும், உடல் உறுப்பியலும், நோயின் தன்மைகளும்

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## குருத்திச்சுற்றோட்ட நிகழ்வு

| உறுப்புகள் | இரத்த நாள, நாடிகள் |
|---|---|
| தலை கழுத்து (Head and Arm) | முற்பக்க நாளம் (Superior Vena Cana) |
| ஈரல் (Liver) | ஈரல் நாளம் (Hepatic Vein) |
| வயிறு - குடல் (Stomach Intestine) | ஈரல் வாயினாளம் (Portal vein) |
| சிறுநீரகம் (Kidney) | சிறுநீரக நாளம் (Renal Vein) |
| இடுப்பு - கால்பகுதி (Pelvis Andleg) | கால்கள் இடுப்பு நாளங்கள் (Internal iliac vein) |
| வலது இதயவறை (Right venricel) | சுவாசப்பெருநாடி |
| வலது சோணையறை (Right Atrium) | (Pulmonary artery) |

இவற்றின் மூலம் சுவாப்பையை அடைந்த இரத்தம் நன்கு சுத்திகரிக்கப்பட்டுச் செல்லும் வழியும் உறுப்புக்களும்:- சுவாசப்பை நாளம் (pulmonary vein) மூலம் இருதயத்தின் இடது சோணையறையை (Left atrium) அடைகின்றது. அங்கிருந்து பின்வருமாறு இரத்தம் தொகுதிப் பெருநாடி (Aorta) மூலம் சுத்த இரத்தம் எடுத்துச்செல்லப்பட்டு தலை + கழுத்துப்பகுதிக்கு இரத்த நாடி மூலம் செல்வதுடன்

ஈரலுக்கு - ஈரல் நாடி (Hepatic artery)
இரைப்பைக்கு - இரைப்பை நாடிக்குழாய் (Abdominal aorta)
சிறுநீரகத்திற்கு - சிறுநீரக நாடி (Renal Artery)
இடுப்புப்பகுதி + கால்பகுதிகள் - கால் இடுப்புப் பகுதிக்குரிய நாடி (Internal iliac artery)
என்பனவற்றின் மூலம் இரத்தம் ஓடிக்கொண்டே இருக்கின்றது.
எனவே மற்றும் உடல் உறுப்பியலும் நோயின் தன்மைகள் பற்றிப் பார்ப்போம்.

இதன் உறுப்பியல் விபரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| இரத்தச் சிறுகுழாய்கள் | - | Blood vessel |
| இரத்த சிறுதுணிக்கைகள் | - | Blood cell |
| வெண் சிறுதுணிக்கைகள் | - | Whits blood cell (W.B.C) |
| செங்குருதிச்சிறுதுணிக்கைள் | - | Red blood cell (R.B.C) |
| குருதிச் சிறு தட்டுக்கள் | - | Platelet |
| குருதிவகைகள் | - | Blood Group |
| நிணநீர் குழாய்கள் | - | Lymph vessel |
| நிணநீர் முடிச்சுக்கள் | - | Lymph node |
| எலும்புமச்சை | - | Bone marrow |

என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலும் இதில் ஏற்படும் **வியாதிகள்**

| | | |
|---|---|---|
| இரத்த அழுத்தம் | - | Blood Pressure |
| குருதியிழப்பு | - | Blood loss |
| செங்கலங்கள் வீழ்படிவுவிதம் | - | Sedimentation rate |
| குருதிகட்டிபடல் | - | Blood clot |
| இரத்தம் நஞ்சாகுதல் | - | Septicaemia |
| குருதிச் சோகை | - | Anaemia |
| இரத்தப்புற்று | - | Leukaemia (லுக்கெமியா) |
| அதிக இரத்த அழுத்தம் | - | (Hyper) High Blood Pressure |
| தாழ்ந்த இரத்த அழுத்தம் | - | (Hypo) Low blood pressure |
| இரத்தம் உறையாநோய் | - | Hemophilia |
| இரும்புச் சத்துக்குறைவு | - | Iron deficiency |
| நிணநீர் முடிச்சுப்புற்று | - | Lymphoma |
| குருதியோட்டத்தில் தடங்கல் | - | Circulatory disturbance |
| நாளப்புடைப்பு | - | Varicose vein |
| குருதி உறைதல் | - | Blood Coagulates |
| குருதி அமுக்கம் | - | Blood pressure |
| இருதயம் சுருங்கும் போது ஏற்படும் குருதியமுக்கம் | - | Systolic blood Pressure |
| இருதயம் விரியும் போது ஏற்படும் குருதியமுக்கம் | - | Diastolic Blood Pressure |
| குருதிப்போக்கு | - | Bleeding haemorrhage |
| உயர்குருதி ஓட்டத்தால் வரும் இரைச்சல் | - | Bruise |
| குருதியில் பிராணவாயு போதாமை | - | Cyanosis |

என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் திடீர் மாரடைப்பு நிலையை நோக்கின் இருதயம் சுருங்கி விரியும்போது இரத்தம் ஓட்டம் தடைப்படுவதினால் ஏற்படுகின்றது. இதனால் சிலருக்கு மரணநிலை ஏற்படுவதும் உண்டு. இது பெரும்பாலும் உணவில் கொழுப்புச் சத்து அதிகரித்தல், புகைபிடிப்பு அதிகரிப்பு, உணவில் அதிக உப்பு சேர்தல், இரத்த அழுத்த நோய், அளவுக்கு மிஞ்சி மது பாவித்தல் என்பவற்றால் ஏற்படும். இருதயம் ஒரு நிமிடத்திற்கு சராசரியாக 72 தரம் சுருங்கி விரிகின்றது. ஒவ்வொரு தரம் சுருங்கிவிரியும் போது 2½ அவுன்ஸ் இரத்தம் வெளியேறுகின்றது. எனவே ஒரு நிமிடத்திற்கு 5 லீற்றர் இரத்தம் வெளியேறுகின்றது. அதிக வேலை, உடற்பயிற்சி செய்யும்போது இருதயத்துடிப்பு பட,பட என விரைந்து காணப்படும். அவ்வேளை, 40 லீற்றர் இரத்தம் வெளியேறுகின்றது. எனவே இருதயத்திற்கு வேலை கூடும்போது குருதி அதிகம் வெளியேறிக் கொண்டே இருக்கும். வெளியேறிய இரத்தம் மற்ற உறுப்புகளுக்கு செல்லும். இரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கு சிறுநீரகப்பழுது ஏற்படலாம் (Renal Failure). இரத்தக்குழாய்கள் சுருங்கி செயலியக்கம் இன்றி சிறுநீரில் அல்புமினை வெளியேற்றும். இரத்தத்தில் யூறியா 40 மி.கிறாம் மேல் அதிகரித்துக் காணப்படும். நாளடைவில் கால்களில் வீக்கம் ஏற்படும். அவ்விடத்தை விரல்களினால் அமர்த்த பள்ளம் விழுவதை அறியலாம்.




உயர் இரத்த அழுத்தம், இருதயநோய், இரத்தநாள நோய் ஆகியவற்றுடன் நாம் அதிகமான வேலைகள் செய்தால் இருதயம் பலவீனம் அடைந்து இடது பக்க இருதய கீழ்அறை வீங்க ஆரம்பிக்கும். படிப்படியாக இருதயச் செயல்இழப்பு (Heart failure) ஏற்பட ஆரம்பிக்கும். இதுபோல இரத்தக்கொதிப்பும் நிகழலாம். எதற்கும் வைத்தியர்களை நாடித்தகுந்த சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். இரத்தத்தில் உள்ள செஞ்சீவ அணுக்கள் (R.B.C) நமது உடலுக்கு பிராணவாயுவை வழங்குகின்றன. வெண்சீவ அணுக்கள் (W.B.C) நோய்களின் தாக்குதலில் இருந்து நம்மைப் பாதுகாக்கின்றன.

இரத்தத்தில் உள்ள பிளேற்லெற்ஸ் (Platelets) என்பது இரத்தம் உறைவதற்கு உதவுகின்றது. இவை யாவும் பிளாஸ்மா (Plasma) என்ற மஞ்சள் நிறத்திரவத்தில் கலந்துள்ளன. இரத்தத் திரவத்தில் உப்பு, புரட்டீன், தாதுப்பொருட்கள், ஊட்டப்பொருட்கள், ஹோர்மோன்கள் மற்றும் உடலுக்குத் தேவையான பல பொருட்கள் கலந்துள்ளன.

இந்த இரத்தம் நமது உடம்பில் உள்ள எல்லா உறுப்புகளுக்கும் உரிய பாதைகளினால் எடுத்துச் செல்லப்படுகின்றன. இரத்தம் உடம்பின் வெப்பநிலையையும் சீராக்குகின்றது. இரத்தம் ஏதாவது உறுப்புப் பகுதிக்குச் செல்லாவிட்டால் உறுப்புக்களின் செயல் பாதிக்கப்படும்.

இரத்தத்தில் செஞ்சீவ அணுக்கள் (R.B.C) குறைவாகக் காணப்பட்டால் இரத்த சோகையும், அணுக்கள் அதிகமாக இருந்தால் 'Polycythaemia' என்ற வியாதி ஏற்படும். இதே போன்று வெண்சீவ அணுக்கள் (W.B.C) அளவுக்கு அதிகமாகப் பெருகினால் புற்றுநோய் ஏற்படும். இரத்தம் உறையாவிட்டால் Haemophilia என்ற வியாதி ஏற்பட ஏதுவாகும். தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் ஓரளவு இரத்தத்தை எடுத்துப் பரீட்சித்து சிச்சை பெறமுடியும்.

நமது எலும்புக்குள் மச்சை (Bone Marrow) என்ற பொருள் உண்டு. இதில் இருந்து தான் வெண்சீவ, செஞ்சீவ அணுக்கள் உற்பத்தியாகின்றன. இது நாள்தோறும் பல கோடிக்கணக்கான புதிய திசுக்களை உற்பத்தி செய்கின்றது.

சிலருக்கு இரத்தக்கசிவு எளிதாக நிற்பதில்லை. இதற்கு இரத்தம் உறைவதற்கு தேவையான Factor Vill என்ற பொருள் பிறப்பிலேயே இல்லாவிட்டால் இந்நிலை ஏற்பட வாய்ப்புண்டு. தாய் அல்லது தந்தைக்கு இந்நிலை இருந்தால் பரம்பரையாகவும் நிகழலாம் எனவும் கூறலாம். பெரும்பாலும் ஆண்களுக்கு வருவது குறைவாகும்.

நமது உடம்பில் எங்கேயாவது காயம் அல்லது புண் ஏற்பட்டால் நுண்கிருமிகள் இரத்தத்தில் கலந்து விரைவாக உடல் முழுவதும் பரவிவிடும். இதன்பொருட்டு இரத்தத்தில் நஞ்சுத்தன்மை கலந்து காணப்படும். இதனை Blood Poisoning எனக்கூறுவர். இதற்கு தங்கள் வைத்தியர்களிடம் சென்று உடன் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். மரணம் ஏற்படவாய்புண்டு.

அப்லாஸ்டிக் அனிமியா (Aplastic Anaemia) என்ற வியாதி சிலருக்கு வருவதுண்டு. இரத்தத்தில் ஏதாவது ஒரு அணு (W.B.C or R.B.C) குறைவாக இருக்கும் அல்லது பாக்டீரியா, வைரஸ் அல்லது மருந்தின் பக்க விளைவு, புற்றுநோய் காரணமாகவும் இருக்கலாம். இதன் காரணமாக உடல் வெளுத்து, பலவீனம் தோன்றி அடிக்கடி நோய் உடையவராக காணப்படலாம். பெரும்பாலும் இரத்த அணுக்களைத் தயார் செய்யும் திசுக்களின் இடத்தில் கொழுப்பு அதிகம் நிரம்பி இருக்கவும் முடியும்.

இரத்தத்தில் செஞ்சீவ அணுக்கள் அதிகமாக இருந்தால் Polycythaemia எனப்படும். அனிமியாவுக்கு இது எதிரிடையானது. அனிமியாவில் இரத்த அணுக்கள் குறைவாக இருக்கும். இது எலும்புகளில் உள்ள மச்சை குறைவாக இருந்தாலும் ஏற்படும். மற்றும் சிறுநீரக வியாதி, சில மருந்துகளினாலும் நிகழலாம். கட்டிகளினாலும் ஏற்படலாம். எனவே எதற்கும் இரத்த அணுக்கள் அளவாக இருப்பதே சாலச்சிறந்தது.

சிலருக்கு வெளித்தோலின் மீது சிவப்புப் புள்ளிகள் காணப்படலாம். இது இரத்தத்தில் இரத்த அணுக்கள் குறைவாக இருப்பதால் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. சாதாரண தடிப்புகளாக (Rashes) இருந்தால் கவலைப்படத் தேவையில்லை. சாதாரணமாக மாறிவிடும். ஒரு மில்லிமீட்டர் கனஅளவு இரத்தத்தில் சாதாரணமாக 2.5 இலட்சம் முதல் நான்கு இலட்சம் வரை இரத்த அணுக்கள் இருக்கும். அதில் ஒரு இலட்சம் அளவு குறைந்தால் அதனை Thrombocytopenia Thrombocytopenia என கூறப்படுகின்றது. இப்படி குறைவாக இருந்தால் தோலில் உள்ள மெல்லிய இரத்தச் சுரப்பிகள் வழியாக இரத்தக்கசிவு ஏற்படும். இந்நிலை ஒரு வாரத்திற்குள் மாறும் அடையாவிடில் வைத்தியர்களிடம் சென்றால் பரீட்சித்து சிகிச்சை பெற்று மாற்றிக் கொள்ள முடியும்.

சிலர் குண்டாயிருப்பது எல்லாவியாதிகளுக்கும் ஏதுவாக அமையலாம். இதற்கு முக்கிய காரணம் இரத்தத்தில் கொழுப்பு அதிகரித்திருப்பதேயாகும். இரத்த கொதிப்பு, நீரிழிவு என்பன ஏற்படக்காரணமாகவும் அமையலாம். அத்துடன் மாரடைப்பும் வரலாம். எனவே கொழுப்பு உணவுகளை தவிர்ப்பதுடன் உடல் பயிற்சி செய்து வந்தால் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும். எதற்கும் தங்கள் வைத்தியர்களிடம் சென்று ஆலோசனையுடன் சிகிச்சையை பெற்றுக்கொள்ளவும்.

இரத்த அழுத்தம் சாதாரணமாக இருந்தால் தீங்கில்லை. ஆனால் அதிகரித்தால் அதனை இரத்தக் கொதிப்பு எனக் கூறப்படுகின்றது.


**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013




தொடர்ச்சி 24ஆம் பக்கம்

# வாகனத்திலிருந்து இறங்கி நடந்து செல்ல சிரமமானவர்களுக்கு மாகாண அரசு வழங்கும் விசேட வாகன தரிப்பு உரிமை பத்திரம்

## கனடிய தகவல் தொடர் 103

## *Accessible Parking Permit*



முன்னர் ஒன்ராரியோ மாகாண அரசு 'ஊனமான நபர்களுக்குரிய வாகன தரிப்பு உரிமை பத்திரம்' (Disable Person parking permit) என இருந்து வந்த முறையினை கடந்த ஜனவரி 16, 2006 யிலிருந்து 'சுலபமாக அடைய கூடிய வாகன தரிப்பு பத்திரம்' (Accessible Parking Permit) என பெயர் மாற்றி அதனை பெறுவதற்குரியவர்களின் தகைமைகளையும் மாற்றியுள்ளது. (ஏனெனில் இப்பத்திரம் வைத்திருப்பவர்கள் பல இடங்களில் இலகுவான முறையில் எந்த நெருக்கடிக்குள்ளும் வாகனத்தரிப்புச் செய்யலாம்.

- இதனை விண்ணப்பித்து பெற தகுதியுடையவர்கள் யார்? யார்?
- எவ்வாறு பெறுவது?
- எப்படி பயன்படுத்துவது?


சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


இங்கு விண்ணப்பிக்க விரும்புபவர் பின்வரும் நிலையில் ஏதாவது ஒரு நிலையில் பாதிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும் என்பது சட்டரீதியாக கனடாவின் அங்கீகாரம் பெற்ற மருத்துவரால் நிரூபிக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

1. Cannot Walk without assistance of another person or brace, cane, crutch, a lowr limb prosthetic device or similar assistive device or who requires the assistance of a wheelchair (இன்னொருவரின் உதவியோ அல்லது செயற்கை ஊன்று கோல் ஆசனங்கள் இல்லாது நடக்க முடியாதவர்கள்.)

2. Suffers From Lung Disease to such an Extent that forced Expiratory volume in one second is less than one litre. (சுவாசம் சம்பந்தமான நோயில் ஒரு எல்லைவரை பாதிக்கப்பட்டு இருப்பவர்கள்.

3. Portable oxygen is a medical necessity (ஒட்சிசன் சிலிண்டர் சுவாசத்திற்காக தம்முடன் எடுத்து செல்பவர்கள்)

4. Cardiovascular disease impairment classified as class III or class iv to standards accepted by the American heart association or class III or iv according to the Canadian Cardiovascular Standard. (இருதயம் சம்பந்தப்பட்ட நோயில் ஒரு வரையறை வரை பாதிக்கப்பட்டு உள்ளவர்கள்)

5. Severely limited in the ability to walk due to an arthritic Neurological, musculoskeletal or orthopedic condition (முழங்கால் மூட்டுவாதம், நரம்பியல் நோய்கள் காரணமாக கொஞ்ச தூரத்திற்கு மேல் நடக்க முடியாதவர்கள்)

6. Visual acuity is 20/200 or poorer in the better eye with or without corrective lenses or whose greatest diameter of the field of vision in both eyes is 20 degrees or less. (கண் பார்வை என்பது ஒரு குறிப்பிட்ட நிலையினை விட குறைந்தவர்கள்)

7. Condition(s) or Functional impairment that severely limits his or her mobility (நடக்க முடியாத அளவுக்கு உடலின் நிலைமை பாதிக்கப்பட்டு இருப்பவர்கள்)

மேற்குறிப்பிட்ட நடக்க முடியாத உடல் நிலைமை பாதிப்பு என்பது மருத்துவ அத்தாட்சிகளுடன் நிரூபிக்கப்படல் வேண்டும்.

இப்பத்திரத்தினை பெறும் விண்ணப்ப பத்திரத்தினை பின்வரும் வழிகளில் பெற்று கொள்ளலாம்.


Ontario
Accessible Parking Permit
Permis de stationnement pour personnes handicapées
P/D
999999
0000-0000-000-0-0000
Jan 31/06 to Jan 31/11

1. www.mto.gov.on.ca என்றும் இணையதளத்திற்குள் போய் 'Vehicle licensing' என்றும் பிரிவினுள் உள்ள 'Accessible parking permit' என்ற சொற் தொடரில் விண்ணப்பம் பதிவு இறக்கம் செய்து பெற்று நிரப்பி அனுப்பலாம்.

2. மாகாண போக்குவரத்து அமைச்சு காரியாலயங்களில் (Driver and Vehicle license issuing office) நேரடியாக பெறலாம்.

3. பின்வரும் விலாசத்திற்கு கடிதமூலம் தொடர்பு கொண்டும் விண்ணப்பம் பெறலாம்.
Service ontario
license renewals unit
P.o.box 9800
Kingston, ontario K7L 5N8

இங்கு விண்ணப்பிக்கும் போது இரு வகையான பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

1. Passenger Permit only (பிரயாணிக்கு மட்டும் உரியது)

இன்னொருவரின் வாகனத்தில் பிரயாணியாக போகும்போது, இப்பிரயாணி தொடர்ந்து நடக்க சிரமமானவராக இருந்தால், அவர் பிரயாணம் செய்த வாகனத்தினை விசேடமாக குறிப்பிட்ட இவ்இடத்தில் தரிப்பு செய்யலாம்.

2. Passengers, Driver permit (பிரயாணியாகவும், சாரதியாகவும் உள்ள நிலையில் உபயோகிக்கும் பத்திரம்)

இப்பத்திரம் பெற்று கொள்ள விரும்புவர் சாரதி அனுமதி பத்திர இலக்கம் இங்கு வழங்குதல் வேண்டும்.

படத்துடன் கூடிய இப்பத்திரம் இவ்விசேட வாகன தரிப்பில் வாகனம் தரித்து நிற்கும்போது வாகனத்தின் முன்பக்க கண்ணாடியினால் தெரியுமளவுக்கு உள்ளே (Display on the Dashboard) வைத்து இருத்தல் வேண்டும். இவ்வாறு அடையாள அட்டை இல்லாது குறிப்பிட்ட இவ் உடல் அங்கவீனமானவரின் இடத்தில் வாகனம் ஒன்றினை தரிப்பு செய்தால் அதற்குரிய பண தண்டனையினை செலுத்தியே ஆக வேண்டும்.

இதிலும் ஐந்து வருடங்களுக்கு என வழங்கி தொடர்ந்து புதுப்பிக்க கூடிய நிரந்தர பத்திரம், ஒரு வருடத்திற்கு மட்டும் வழங்கும் தற்காலிக பத்திரம் பிரயாணிகள் பத்திரம், உடல் அங்கவீனமானவர்களை தங்கள் வாகனங்களில் ஏற்றி இறக்கும் கம்பனிகளுக்கு வழங்கும் பத்திரம் என பல வகை உண்டு.



இப்பத்திரத்தினை பெற எதுவிதமான கட்டணமும் செலுத்த தேவையில்லை. ஆனால் தப்பான முறையில் ஏதாவது பத்திரங்கள் உபயோகித்தால் மட்டும் $300 - $500 டொலர் வரை தண்டனை பணம் செலுத்த வேண்டி ஏற்படும்.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்


Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# ஆனந்தம் - ஆரோக்கியத்துடன் வாழ்வோமாக!

## நலந்தானா! - 1

எமது உடலின் பிரதான கட்டுப்பாட்டு மையம் மூளையாகும். மூளையில் உருவாகும் சிறிதளவிலான மின்சாரம் நரம்புக்கணத்தாக்கங்களை ஏற்படுத்தி உடல் முழுவதையும் இயக்கிக் கொண்டு இருக்கின்றது. இருதயத்தில் உள்ள நான்கு அறைகளில் வலது பக்கச் சோணையறையில் தானியங்கு மையம் ஒன்று உண்டு. இது இதயவடிப்பை ஒழுங்காக இயங்கச் செய்கின்றது. எனினும் மூளையில் இருந்து வரும் பரிவு நரம்பும் பராபரிவு நரம்பும் இதயத் துடிப்பின் வேகத்தைக் கூட்டிக் குறைக்கின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள செயல்கள் நடைபெறுவதற்கு பலவிதமான இரசாயனத் தாக்கங்கள் நடைபெறல் வேண்டும். எமது உடல் பஞ்ச பூதங்களால் உருவாக்கப்பட்டது. வளர்ச்சிக்கும் உடற்தொழிற்பாடுகளுக்கும் சிந்திப்பதற்கும் நோய்களை எதிர்த்துப் போராடுவதற்கும் உடலுழைப்பிற்கும் இவற்றின் தேவை மிகவும் அவசியமாகின்றன. இவற்றை நாம் உணவு சுத்தமான நீர் சுவாசக் காற்று என்பன மூலம் பெறுகின்றோம். இதனால் உணவைப்பற்றிய அறிவு பிரதானமாகின்றது.

நாம் உண்ணும் உணவு சத்துள்ளதாகவும் ஊட்டச்சத்துக்கள் உடையனவாகவும் அளவானதாகவும் இருத்தல் அவசியம். இதை சமபல உணவு என்று கூறுவர். உணவின் அளவு குறைந்தாலும் கூடினாலும் ஊட்டச்சத்துக்களின் அளவு குறைந்தாலும் கூடினாலும் உடலின் செயற்திறன் அதற்கேற்ப மாறுபடும்.


**_Dr. K. Senthilnathan_**

Health Educator

(Certified First and CPR Instructor)

**_To learn and receive certificates on First aid and CPR courses. Pl. call 416-502-9252_**


'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா' என்பது பழமொழி. அதாவது ஐந்து வயது அடைவதற்குள் குழந்தைகளின் மூளை வளர்ச்சியிலும் உடல் வளர்ச்சியிலும் பெற்றோர் அதிகளவு அக்கறை காட்டுதல் அவசியமாகும். உளவியல் ரீதியிலும் மூளையைப் போசிப்பதற்குப் பெற்றோர் வழிசெய்தல் வேண்டும். நல்ல பழக்க வழக்கங்களையும் ஊட்டி வளர்த்தல் வேண்டும்.

சமபல உணவு ஆறு வகையான கூறுகளை உடையவை. இது புரதம், கொழுப்பு, மாப்பொருள், கனியுப்புக்கள், ஊட்டச்சத்துக்கள், நீர் ஆகிய அறுவகைப்பதார்த்தங்களும் தேவையான அளவில் கொண்டுள்ள உணவாகும். மழலைகள், குழந்தைகள், சிறுவர்கள் வளர்ந்தவர்கள், முதியவர்கள், சுகதேகிகள், நோயாளிகள் ஆகியோரிற்குரிய உணவுத் தேவைகள் அவர்களின் உடற்தொழிற்பாடுகளுக்கமைய வேறுபடும்.

முட்டை புரதவகையில் திறமானது. இதில் கோலின் (Choline) என்றொரு பதார்த்தம் உண்டு. இப்பதார்த்தம் அசற்றையில் கோலின் (Acetylcholine) என்னும் பதார்த்தமாக மாறி நரம்புக் கலங்களிடையே செய்திப் பரிமாற்றம் நடைபெற உதவுகின்றது. கோலின் பதார்த்தம் அடங்கிய உணவை உண்பவர்கள் நல்ல ஞாபக சக்தி உடையவர்களாக இருக்கின்றார்கள் என ஆய்வுகள் கூறுகின்றன.

கர்ப்பிணித்தாய்மாருக்கு கோலின் மிகவும் அவசியமானது. இது தொப்புள் கொடியினூடாகச் சென்று சிசுவின் வளர்ச்சிக்கு உதவுகின்றது. ஒரு முட்டையில் சராசரி 230 கிராம் அளவு கொலெஸ்ரெறேல் உண்டு. குருதியில் கொலெஸ்ரெறேல் அளவு கூடுதலாக இருப்பவர்கள் வைத்திய ஆலோசனைப்படி முட்டை சாப்பிடலாம். ஒரு கிழமைக்கு 2 அல்லது 3 முட்டைகள் பாவிக்கலாம்.

மூளைக்குத் தேவையான சக்தி குளுக்கோசுப் பதார்த்தம் மூலம் கிடைக்கின்றது. குளுக்கோசின் அளவு குறையாமலும் அதேசமயம் அளவுக்கு மீறிக் கூடாமலும் இருப்பதற்கு சதையி என்னும் சுரப்பியில் இருந்து சுரக்கப்படும் இன்சுலின் குளுக்கோன் போன்ற சுரப்புக்கள் உதவுகின்றன. நீரிழிவு நோய் உள்ளவர்கள் தமது நோயைத் தட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம். மூளையைப் பாவித்துச் செய்யப்படும் வேலைகளுக்கு குளுக்கோசு பாரிய அளவு தேவைப்படுகின்றது. எனினும் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு குளுக்கோசுவின் அளவு குருதியில் கூடுவதனால் பிரசாரண அமுக்கம் காரணமாக அதனை மூளை திறம்பட பாவிக்க முடியாமல் திணறுகின்றது.

தினமும் ஏதாவது பழவகைகள் உணவில் சேர்க்கப்படல் வேண்டும். கொய்யாப்பழம், மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், அன்ன முன்னாப்பழம், அன்னாசிப்பழம், தோடை, தேசிக்காய் என்பன உடலுக்கும் உள்ளத்திற்கும் மிக ஆரோக்கியமானவை. இவற்றில் உள்ள கனியுப்புக்கள் ஊட்டச்சத்துக்கள் என்பன மூளையையும் உடலையும் சரிவர இயங்க வைக்கின்றன.

முந்திரிகைப்பழம், ஸ்ரோபரி போன்ற பழங்களில் காணப்படும் அன்தோசயனின்ஸ் (Anthocyanin) என்கின்ற பதார்த்தம் நரம்புக்கணத்தாக்கங்களைக் கடத்துகின்ற செயற்பாட்டை மேம்படுத்துவதுடன் புதிய நரம்புகள் உருவாகுவதையும் உற்சாகப் படுத்துகின்றது. இதனால் பல விடயங்களைக் கிரகிக்கும் ஆற்றல் வளர்வதுடன் ஞாபகசக்தியும் கூடுகின்றது.

தயிர் வகைகளில் B12 ஊட்டச்சத்து உண்டு. இந்த விற்றிமின் B12 ஆனது போலிக்கமிலம் (Folic Acid), பிரிடொக்சின் (B6) என்பனவற்றுடன் சேர்ந்தியங்கி ஹோமோசிஸ்ரின் (Homocysteine) அளவை குறைக்கின்றது. உடற்தொழிற்பாட்டின் பொழுது பக்கப்பொருளாக உருவாகும் ஹோமோசிஸ்ரின் என்ற அமைனோ அமிலம் அதிகளவில் மூளையில் சேரும் பொழுது மூளை நரம்புக்கலங்கள் பாதிக்கப்படுகின்றன. விற்றமின் B12, B6, போலிக்கமிலம் என்பன உணவு வகைகளில் சேரும்பொழுது அவை மூளையில் சேரும் ஹோமோசிஸ்றினின் அளவைக்குறைக்க உதவுகின்றன. இதனால் மறதி மூடாப்புத்தன்மை என்பன நீங்கி சிந்தனைத்தெளிவு ஏற்படுகிறது. சைவ உணவுப்பிரியர்கள் தமது B12 சத்திற்கு பால், தயிரையே நம்பியிருத்தல் வேண்டும்.

நாம் சுவாசிக்கும் காற்றில் உள்ள பிராணவாயுவை உடல் முழுவதும் கடத்திச் செல்வதற்கு குருதியில் உள்ள செங்குருதிச் சிறுதுணிக்கைகள் உதவுகின்றன. பிராணவாயு எல்லாவித உடலுழைப்புக்கும் அவசியமானது. இதனைக்கடத்திச்செல்லும் செங்குருதிச் சிறு துணிக்கைகள் உருவாவதற்கு புரதம், விற்றமின் B12, போலிக்கமிலம், இரும்புச்சத்து என்பன மிகவும் பிரதானமானவை. இவை உணவில் சேரும்பொழுது குருதிச்சோகை (Anemia) நோயும் நீங்கி உடல் நலம் சிறக்கிறது.

எண்ணெய் வகைகளில் விளக்காத நல்லெண்ணை, ஒலிவெண்ணை என்பனவற்றில் நிரம்பாத கொழுப்பமிலங்கள், விற்றமின் E போன்ற ஒட்சியேற்றவெதிரிகள் (Anti oxidant) என்பன உண்டு. இவை நரம்புக்கலங்களை சுற்றியுள்ள மென்சவ்வின் தன்மை கெடாமல் இருப்பதற்கு உதவிபுரிகின்றன. மீனெண்ணையும் மிகவும் நலமானது. இதிலுள்ள ஒட்சியேற்ற வெதிரிகள் இருதய வியாதி, நீரழிவு போன்ற நோய்களைத் தடுக்கும் தன்மை கொண்டவை.



கீரை வகைகளில் பலவகை உண்டு. கடும்பச்சை நிற இலை வகைகளில் இரும்புச் சத்து, போலிக்கமிலம் என்பன உண்டு. இரத்தம் உருவாவதற்கும், மூளை நரம்புக்கலங்களில் கணத்தாக்கங்கள் நடைபெறுவதற்கும் இவை அவசியம் உணவில் சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும். உடற்களைப்பு அகன்று மன உற்சாகம் ஏற்பட வழிவகுக்கும். அரிந்தெடுத்த வெங்காயம், துருவிய உள்ளித்துகள்கள், கழுவிய பச்சைக்கீரைவகைகள் என்பவற்றை பட்டர் பூசிய பாண்துண்டுகளிடையே வைத்து காலையுணவாகக் கொள்வது நல்லது. கீரை வகைகளில் உள்ள நார்ப்பொருள் உணவுகள் உறிஞ்சப்படும் வேகத்தையும் அளவையும் சீர் செய்வதனால் நார்ச்சத்தும் நன்மை புரிகின்றது.

பருப்பு வகைகளில் நல்ல புரதம், நார்ப்பொருள், விற்றமின் B6, போலிக்கமிலம் என்பன நிறைய உண்டு. மனம் நிதானமாகவும், அமைதியாகவும் செயற்படுவதற்கு சீறோரோனின் (Serotonin) என்ற பதார்த்தம் மூளையில் போதியளவு உருவாகுதல் வேண்டும். இதற்கு விற்றமின் B6 உதவி புரிகின்றது. ரிப்ரோபான் (Tryptophan) என்ற அமைனோ அமிலம் சிரோரோனின் ஆக மாறுவதற்கு விற்றமின் B6 உதவுகிறது.

மூளை சிறப்பாகத் தொழிற்படுவதற்கு உணவுடன் உடற்பயிற்சியும் தேவைப்படுகின்றது. உளவளத்துடன் உடல்வளமும் சேர்ந்தால் வளமுடன் வாழலாம்.


## REDEVELOPMENT PROPERTY WITH MOTEL FOR SALE



- Prime property by river in downtown Niagara Falls.
- A short walk from train and bus stations.
- Designated "Major Commercial" in the Official Plan.
- Potential for high-rise residential redevelopment.
- Eligible for local and regional government incentives under City's Community Improvement Plan.
- Currently houses 33-room motel with outdoor heated pool and attached four-bedroom house.

Inquires Tel: ***416-669-3101***

# சித்தியடையவேண்டிய பரீட்சை

## ஓடும் நீர் உறைவதில்லை

வாழ்க்கையின் மிகவும் முக்கியமான செயற்பாடு பல்வேறுபட்ட பரீட்சைகளுக்கு முகம்கொடுத்து முன்னேறிச் செல்வது தான் இப்பரீட்சைகளில் சில எதிர்பார்க்கப்பட்டவையாகவும் பல எதிர்பாராதவைகளாகவும் அமைகின்றன. முன்கூட்டியே எதிர்பார்க்கப்படும் பரீட்சைகளுக்கு முன் னறிவுப்புக்களும், வழிப்படுத்தல்களும் வழங்கப் பட்டு நாம் தயார்படுத்தப்படுகின்றோம். மாறாக எந்தவித தயார்படுத்தலும் இல்லாமல், எதையும் எதிர்பாராதவகையில் எழும் அல்லது எதிர் நோக்கும் பரீட்சைகளே வாழ்வியலில் ஒருவரது வெற்றிக்கான படிக்கற்களாக அமைகின்றன. எனவே ஒருவரது வாழ்க்கையில் அவர் அடையும் வெற்றியும் வெற்றியின்மையும் அவர் எதிர் நோக்கும் பரீட்சைகளின் தன்மைகளால் தீர்மானிக்கப்படுகின்றது.

பரீட்சைபற்றிய முன்னறிவுப்புடன் அதற்காகத் தம்மை ஆயத்தப்படுத்துவதற்காக மற்றவர்களது உதவிகளைப் பெறுவதும், உபகரணங்களைப் பயன்படுத்துவதும் அப்பரீட்சை பற்றிய பெறுபேறு களின் முன்னுணர்வுக்கு வழிவகுக்கின்றது. ஒருவரது பரீட்சையின் பெறுபேறுகள் முன் கூட்டியே எதிர்பார்க்கப்படுமாயின் அப்பெறுபேறு கள் வாழ்க்கைக்கு ஒரு புதிய பாடத்தைக் கற்பிப்பதாக அமைவதில்லை. ஏனெனில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் எமக்குக் கிடைப்பதற்கான ஆயத்தங்கள், ஆதரவுகள் அந்த மகிழ்ச்சியின் பெரும் பகுதியை விழுங்கிவிடுகின்றன. இதனால் தான் பாட-சாலைக் கல்வி முறையில் நாம் எதிர்நோக்கும் பரீட்சைகள் முன்னறிவுப்புச் செய்யப்பட்டிருப்பதும், அதற்காக ஆசிரியர்களும் பெற்றோர்களும் எம்மை தயார்படுத்துவதும் அதன் பெறுபேறு களால் ஏற்படக்கூடிய மகிழ்ச்சியின் மிகப்பெரும்பங்கை மறைத்து விடுகின்றன. எமக்குக் கிடைக்கும் மகிழ்ச்சியின் ஒரு பகுதி எமது சொந்த உழைப்பின் மூலம் பெறப்படுவதாகவே அமைகின்றன. இதனால் தான் மிகக்குறைந்த உதவிகளைப் பெற்று பரீட்சையில் சிறப்புச் சித்திபெறும் மாணவர்களது மகிழ்ச்சியானது அதிகளவு உதவிகளைப் பெற்றுப் பரீட்சையில் சிறப்புச் சித்திபெறும் மாணவர்களின் மகிழ்ச்சியைவிடப் பல மடங்கு அதிகமாக இருப்பது மட்டுமல்ல எதிர்காலத்தைச் சிறப்பாக எடுத்துச் செல்வதற்கான மனநிலையையும் உருவாக்குகிறது.

வாழ்வியலில் நாம் அறிந்தோ அறியாமலே நாளாந்தம் பல பரீட்சைகளுக்கு முகம் கொடுக்கின்றோம். சில பரீட்சைகளில் வெற்றியையும் வேறுசிலவற்றில் வெற்றியின்மையும் அடைகின்றோம். சில சந்தர்பங்களில் ஒரே விடயத்தை நாம் அடைவதற்கு ஒன்றிற்கும் மேற்பட்ட பரீட்சைகள் நமக்குத் தரப்படும் போது எமது எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் எமக்கு அதிகளவு சாதகமான விளைவுகளைத் தரும் பரீட்சைகளைத் தெரிவு செய்கின்றோம். இவ்வாறு தெரிவு செய்யும் போது அதி பெரும்பான்மையானவர்கள் இலகுவான பரீட்சைகளையே தெரிவு செய்கின்றார்கள்.

பரீட்சைகள் எமது வாழ்க்கையை நெறிப்படுத்துவன. நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு பரீட்சையிலும் நம்மை அடுத்தநிலைக்கு எடுத்துச் செல்லும் வாய்ப்பு அளிக்கப்படுகின்றது என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். எனவே நாம் எதிர்நோக்கும் பரீட்சைகளை முழுமையான தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்வதற்கான மனப்பக்குவத்தை வளர்ப்பது வாழ்வியலின் அடிப்படையாதல் வேண்டும்.

**KG Master**-*kgmaster@rogers.com*

நாம் எதிர்கொள்ளும் பரீட்சைகள் அனைத்திலும் வெற்றிகொள்ள முடியுமா என்ற வினாவுக்கு விடையாக அமைவது முடியாது என்பதே. பரீட்சையில் சித்திபெறுவது அல்லது பெறாமல் விடுவது என்பது பரீட்சைக்கான விடயம் பற்றிய அறிவு, பரீட்சையில் சித்தி பெறுவேன் என்ற உறுதியான நம்பிக்கை, அந்த உறுதியை உறுதிப்படுத்தும் உழைப்பு என்பனவற்றின் ஒருங்கிணைந்த செயற்பாட்டால் தீர்மானிக்கப்படு கின்றது. எனினும் நாம் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை விட அதில் இருந்து நாம் பெறும் அனுபவமே மிகவும் முக்கியமானது. ஏனெனில் வாழ்க்கையின் சிறப்பு அம்சமாக அமைவதே நமது அனுபவங்களிலிருந்து பெற்ற, பெற்றுக் கொண்டிருக்கின்ற அறிவுதான் அதாவது அனுபவ அறிவு.

வாழ்க்கையின் பாதையில் நாம் எதிர்கொள்ளும் பரீட்சைகள் அனைத்திலும் நாம் சித்தியடைய முடிவதில்லை. சில பரீட்சைகள் இலகுவான-தாயும் வேறுசில கடினமானதாகவும் அமைகின்றன. சில பரீட்சைகளை நாம் தவிர்க்க முயற்சிப்பது உண்டு. நமது வாழ்வியல் அனுபவங்கள், சேகரித்துக்கொண்ட அறிவு என்பவற்றின் தன்மைகளைப் பொறுத்து சிலபரீட்சைகளைப் பின்போடுவதும் உண்டு. சில பரீட்சைகளை உடனடியாக எதிர்கொள்வதுமுண்டு. ஆனால் ஒரே ஒரு பரீட்சையை மட்டும் பின்போடவும் முடியாது, அதிலிருந்து சித்தி பெறுவதைத் தவிர்க்கவும் முடியாது. அதாவது சித்தி பெற்றேயாக வேண்டும்.

இவ்வாறு சித்தியடைந்தேயாகவேண்டிய பரீட்சை எது? ஏன் சித்தியடைந்தேயாக வேண்டும்? பரீட்சைக்கான விடயம் எது? தகவல்கள் எங்கிருந்து கிடைக்கும்? ஆசிரியர்கள் யார்? அவர்களது உதவிக்கும் வழிகாட்டலுக்கும் வாய்ப்புண்டா? எம்மை மாணவராக்கும் அந்தப் பரீட்சை என்ன? பாடப்புத்தகங்கள் எவை? இவ்வாறு பலவினாக்கள் எமது உள்ளத்தில் எழுவது இயல்பானதே. இவ்வாறு பலதரப்பட்ட கேள்விகளை நாம் கேட்பினும் ஒரு பரீட்சை சம்பந்தமாக அத்தனை கேள்விகளையும் மூன்று விடயங்களுக்குள் நாம் அடக்கலாம். ஒன்று மாணவர்கள் யார் என்பது மற்றையது ஆசிரியர் யார் என்பது மூன்றாவது சித்தியடைய வேண்டியவர் யார் என்பது.

இங்கு குறிப்பிடப்படும் பரீட்சையில் காணப்படும் விசித்திரமான விடயம் என்னவெனில் மற்றவர்களது பார்வைக்கு ஆசிரியர்களாகவும் வழிகாட்டிகளாகவும் காணப்படுபவர்கள் மாணவர்களாகவும், மற்றவர்களது பார்வைக்கு மாணவர்களாகக் காட்சியளிப்பவர்கள் ஆசிரியர்களாகவும், வெற்றியடைய வேண்டியவர் ஆசிரியராகவும், அதனால் சித்தியடைய வேண்டியவர் மாணவர்களாகவும் இருத்தலாகும்.

சாதாரண பார்வையில், பெற்றோர்கள் அவர்களது குழந்தைகளின் ஆசிரியர்களாகவும் வழிகாட்டி களாகவும் காணப்படுவர். அதேபோன்று குழந்தைகளும் மாணவர்களாக வகைப்படுத்தப் படுவர். குழந்தைகளின் சிறப்பான வளர்ச்சி பெற்றோர்களின் வெற்றியாகவும் தீர்மானிக்கப்படு கின்றது. ஆனால் இவையனைத்தும் ஒரு சாதாரண பார்வையினால் எழும் எண்ணக்கருத்துக்களே.

உண்மையில் பெற்றோர்கள் மாணவர்களாகவும் குழந்தைகள் ஆசிரியர்களாகவும், குழந்தை வளர்ப்பு வாழ்க்கை நூலாகவும் குழந்தைகளின் வெற்றி பரீட்சையில் சித்தியாகவும் அமைவது தான் வாழ்வியல் உண்மையாகும். பெற்றோர்கள் குழந்தைகளின் வளர்ப்பின் ஊடாக பல்வேறுவகையான விடயங்களை அறிவியல் அனுபவரீதியாகக் கற்கும் மாணவர்களாகின்றனர். ஒரு குடும்ப அமைப்புக்குள் கணவன், மனைவி என்ற நட்பு முறையிலிருந்து அப்பா, அம்மா என்ற உறவுமுறைக்கு வழிவகுக்கும் குழந்தைகளது அனுபவங்கள் பெற்றோர்களுக்கான சிறந்த வாழ்க்கைப் பாடமாக அமைவதால் அவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டிய கட்டாய தேவை ஏற்படுகின்றது. இங்கே குழந்தைகளின் வளர்ச்சியும் அதனுடன் இணைந்த செயற்பாடுகளும் புதுப்புது விடயங்களைப் பெற்றோர்களுக்குக் கற்பிப்பதால் குழந்தைகள் ஆசிரியர்களாகவும், பெற்றோர்கள் மாணவர்களாகவும் மாற்றப்படுகிறார்கள். இங்கே குழந்தைகளின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும் புதுப்புது அனுபவங்களைப் பெற்றோர்களுக்கு கற்பிப்பதால் குழந்தைகள் ஆசிரியர்களாக மட்டு மல்ல பாடநூலாகவும் அமைக்கப்படுகிறார்கள்.

சாதாரண நடைமுறையில் ஒரு மாணவனின் வெற்றி அந்த மாணவனது ஆசிரியரின் வெற்றியாகவும் அளவிடப்படுகின்றது. இங்கு பரீட்சைக்கு முகம்கொடுப்பவர் மாணவராகவும் அப்பரீட்சையின் பெறுபேறுகள் ஆசிரியரின் தரத்திலும் ஒரு கணிப்பை உருவாக்குவதையும் காணலாம். மாறாக குழந்தை வளர்ப்பு என்ற வாழ்வியல் பாடத்திட்டத்தில் குழந்தைகள் பெற்றோர்களுக்கான ஆசிரியர்களாக அமைவ-தால் மாணவர்களாகிய பெற்றோர்களின் வெற்றி அவர்களது ஆசிரியர்களான குழந்தைகளின் வெற்றியால் தீர்மானிக்கப்படுகின்றது.

இந்த ஆசிரியர்களாகிய குழந்தைகள் மாணவர்களாகிய பெற்றோர்களுக்கு என்ன விடயங்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள்? பொறுமை, ஒற்றுமை, புரிந்துணர்வு, தரமான தொடர்பு கொள்ளல், ஒருவரை ஒருவர் மதித்தல், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தல், மற்றவர் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், முன்னேற்றமான சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளல், ஊக்குவிப்பு, தலைமைத்துவ தகைமை, தரமான மனிதர்களின் சேர்க்கை, இறை நம்பிக்கை, ஆக்கபூர்வமான விடயங்களில் நேரத்தை பயன்படுத்துதல், நேர்மை, உண்மை பேசுதல், கடின உழைப்பு, தன்னம்பிக்கை, தன்னைப்பற்றிய உயர்வான பார்வை, உயர்வான எண்ணம், இடைவிடாத முயற்சி, வெற்றி மனோபாவம் போன்ற விடயங்களையே கற்பிக்கிறார்கள்.

ஒரு குழந்தையால் மேற்கூறப்பட்ட விடயங்களை எவ்வாறு தனது பெற்றோர்களுக்குக் கற்பிக்கமுடியும் என்று எண்ணுகிறீர்களா? ஆச்சரியப்படாதீர்கள். அவர்களிடம் நாம் எதை எதிர்பார்க்கிறோமோ அதைத்தான் அவர்களும் எங்களிடம் எதிர்பார்க்கிறார்கள். அதாவது ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைகளில் எதை எதிர்பார்க்கிறார்களோ அதைக் குழந்தைகளும் பெற்றோரிடத்தில் எதிர்பார்க்கிறார்கள். இதனால் தான் மேற்கூறப்பட்ட விடயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாய தேவைக்கு பெற்றோர்கள் நெறிப்படுத்தப்படுகிறார்கள்.

### ஆம் வாசகர்களே!

குழந்தை வளர்ப்பு என்பது வாழ்வியலில் தவிர்க்கப்படமுடியாத, தவிர்க்கப்படக்கூடாத ஒரு பரீட்சை. இந்தப் பரீட்சையில் ஒவ்வொரு பெற்றோரும் சித்தியடைந்தேயாக வேண்டும். ஏனெனில் இந்தப் பரீட்சையில் நாம் காணும் வெற்றி நமது வெற்றியும் நமது குழந்தைகளின் வெற்றியும் மட்டுமல்ல அடுத்த தலைமுறையின் வெற்றிக்கும் அத்திவாரமாக அமைகின்றது.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹாராஜியின் உரைகள்**



| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3223 | Saturdays at 10:30 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

# உலகப்பொதுமொழி உடல்மொழியே

உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த உதவும் கருவியே மொழி. ஒரு மொழியால் உருவாகும் வாக்கியங்களுக்கு எழுவாய் பயனிலை இருக்கும். சிலவேளைகளில் செயற்படுபொருளும் சேர்ந்து கொள்ளும். மொழிக்கு எழுத்து, சொல் என இருநிலைகள் உண்டு. இவற்றிற்கான இலக்கணங்களை உருவாக்கியமொழிகள் பல. எழுத்து, சொல் என்பவற்றோடு பொருளுக்கும் இலக்கணம் கண்ட பெருமை தமிழுக்கு உண்டு. எல்லாச்சொல்லும் பொருள்குறித்தனவே என்ற சொற்பொருளுக்கு மட்டுமல்லாமல் வாழ்வியல் பொருளுக்கும் அகப்பொருள் புறப்பொருள் எனக் கண்டு காட்டிய திறன் தமிழ் மொழிக்கு உண்டு. இதனைக் கண்டு காட்டியவர் ஒல்காப்பெரும்புகழ் தொல்காப்பியர் என்னும் இலக்கண வித்தகரே.

மொழிகளின் பழமை பேசப்படும் போது தமிழ் மொழியின் பழமையே முன்னைப் பழமைக்கும் பழைமையாய் குறிப்பிடப்பட்டது. இதனையே கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ் என்று புறப்பொருள் வெண்பா மாலை ஆசிரியர் ஐயனார் கூறியுள்ளார்.தமிழ்மொழி பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் அன்று தொடக்கம் வளர்ந்து வளர்ந்து இளகி இளகி எளிய நடை இலகு நடைபயின்று பல ஆக்கங்களை சிருஷ்டிகளை உருவாக்கியும் இன்றுவரை மக்கள் பேசும் மொழியாகவும் இருக்கும் தகுதி மிக்கது. இதனைத் தமிழ் மொழியில் பாண்டித்தியம் மிக்க தமிழ் புலமையாளர்கள் பரிதிமாற் கலைஞர் உள்ளிட்ட பலரும், அமெரிக்கப் பல்கலைக்கழக ஆங்கிலேயரான பேராசிரியர் ஜோர் கார்ட்வரை காரணங்கள் காட்டி நிறுவியுள்ளார்கள். மரதன் ஓட்ட வீரர்களைப் போன்று தமிழ் இன மக்கள் தமிழ்மொழியை தமது சந்ததியினருக்கு பாரம்பரியத்தினருக்கு வழிவழியாக வழங்கி இம்மொழியை செம்மொழி நிலைக்கு உயர்த்தியுள்ளனர்.

தமிழ்மொழி போன்று கிறீக், இலத்தீன் சமஸ்கிருதம் முதலிய மொழிகளும் செம்மொழித் தகுதி உடையனவே. தமிழ் மொழிக்கு இயல் வடிவம், இசை வடிவம், நாடகவடிவம் இற்றை வரை அழியா அழகுகளாய் இருக்கின்றன. உலகத்திலே 6800 மொழிகளைப் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். இந்த மொழிகளிலே தொண்ணூறு சதவீத மொழிகள் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. காரணம் அந்த மொழி களுக்கு எழுத்து வடிவம், அகராதி, இலக்கியம், இலக்கணம் முதலியன இல்லாமையே. ஆதலால் தாய்மொழியான தமிழை வளர்க்க தமிழ்மக்கள் முயலவேண்டும். சிலமோகங்கள் காரணமாக மொழி ஆர்வம் குறைகின்றது. இதனை மாற்றி அமைக்க முயற்சி எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கூறியுள்ளார்.

பேசும் மொழி பல இல்லாமல் போகும் தருணத்தில் உலக இனங்கள் அனைத்துக்கு மான ஒரு பொதுமொழி உருவாகும். அது தொடர்பாடலுக்கும் இன்ப துன்பங்களைப் புரிந்து கொள்வதற்கும் சண்டைசச்சரவு தோன்றாமல் மனிதர்கள் அனைவரும் ஒரு குலம் என்பதை உணர்ந்து வாழவும் உதவும் என்று ஒரு அறிக்கை கூறுகிறது. உரையாடலுக்கு மட்டுமல்ல ஊடகத் தேவைகளுக்கும் அந்த மொழியே உதவும் என்கிறது. அது எந்த மொழி? உயர்தனிச் செம்மொழிகளில் ஒன்றா? எல்லாம் வல்ல வல்லரசு தீர்மானிக்கும் மொழியா? ஆங்கிலமா? பிரஞ்சா?, ஜேர்மனா?, சீனமா? இந்தி மொழியா? இல்லவே இல்லை.

இனத்துவங்களின் அடையாளத்தன்மைகளின் முதல் அலகான தாய்மொழி என்னாகும்? கலை, கலாச்சாரப்பண்பாட்டுப் பேணல்கள் உலகப் பொதுமொழியாய் வரும் ஒரு மொழியால் கட்டிவளர்க்க முடியுமா? காப்பாற்றமுடியுமா? ஒருமொழியே பேசப்படவேண்டும். எழுதப்பட வேண்டும். ஒரே கலாச்சாரம் தான் கடைப்பிடிக்க வேண்டியது. மனிதநாகரிகம் நாட்டுக்கு நாடு வேறுபடும். மனிதப் பண்பு எல்லா நாட்டிற்கும் உரிய ஒன்றுதான். இது போன்று நாகரிகத்தையும் ஒரே நடைஉடை பாவனை என்று வைத்துக்கொள்ள வேண்டியது தான். இது அரசகட்டளை. மீறுவோர் தண்டிக்கப்படுவர் என்று பிரகடனப்படுத்தப்போகும் சர்வ அதிகாரம் கொண்ட அரசு எது? அமெரிக்காவா? சீனாவா? இங்கிலாந்தா? அல்லது இன்று எல்லா வல்லரசுகளின் ஆலோசனைகளையும் தூக்கி எறிந்து, ஏகன் அனேகன் எல்லாம் நான்தான் என்று திமிறும் ஸ்ரீ லங்காவா? அது எப்படி சிங்களமொழியை விடுத்து இந்தி மொழி பிரயோகத்திற்கு சம்மதிக்கும்? சிங்கள மொழி ஆதிக்கத்திற்காக தமிழ் இனத்தையே அழிக்கும் ஆவேசத்தில் தன் இனத்தையே அழிக்கும் அல்லல்படுத்தும் அறியாமை ஆணவத்தில் முற்றிமுறுகி நிற்கிறதே!. வடமொழியான இந்தியின் பூர்வீக நாடான இந்தியா வல்லரசாக வரும் வாய்ப்புக்களைப் பெற்றிருந்து அஞ்சி அஞ்சிசாகும் அவலநிலைகளாலும் மாநிலங்களை ஒன்று படுத்தி இணைக்கும் முயற்சியில் இயலாமைக் களைப்போடும் காணப்படுகிறதோ இந்தியா இந்தியை எப்படி உலகமொழியாக்கும்? இவை போன்ற பல கேள்விகள் எழுந்து விடைகாண முடியாத இடியப்பச்சிக்கலாய் இருக்கிறது.

இந்தச் சிக்கல்களைப் பற்றிய சிந்தனை ஒரு உண்மையை கண்டுபிடித்தது. வல்லாதிக்கம் செலுத்தாமலும் இனங்களின் தனித் தன்மைகளை அழிக்காமலும் மனிதப்போர்களை உருவாக்காமலும், கத்தியின்றி இரத்தமின்றி துவக்குச்சூடின்றி குண்டுகள் இன்றி ரசாயனச் செலவின்றி அச்சுவாகனம் அகராதி இலக்கியம், இலக்கணம் எதுவும் இல்லாமலும் உலகப்பொதுமொழியாய் விளங்கும் தகுதியும் உலக இனங்கள் அனைத்தும் மனம்மார ஒப்புக்கொள்ளும் ஒரு மொழி உண்டு. அது உருவாகிய காலம் மிகமிகப்பழையது. தமிழ் மொழிக்கும் முந்தியது. குரங்கிலிருந்து மனிதன் உருவான காலத்தில் உண்டான மொழி இது. இம்மொழியின் மூல குரு குரங்காகவும் இருக்கலாம். குரங்குச்சேட்டைகளினால் இது உணரப்படும். இந்தமொழியின் பெயர் என்ன? அறிய ஆவல் பிறக்கிறதல்லவா? உள்ளத்து உணர்வுத்துடிப்பிலிருந்து எழுந்த உடல்மொழியே (Body Language) இது. உடல்மொழிக்கு மெய்ப்பாடு என்றும் இன்னொரு பெயர் உண்டு.

இந்த உடல்மொழிக்கு இலக்கணம் இல்லை. இலக்கியம் இருந்தால் தானே இலக்கணம் இயம்ப முடியும். தமிழ் சமஸ்கிருதம் ஆங்கிலம் போன்று உடல்மொழியும் வளர்ந்து வளர்ந்து தனது இயக்கத்துக்கு வேண்டிய ஒழுங்குமுறைகளையும் நெறிகளையும் உருவாக்கியிருக்கிறது. இன்று வாய் பேசாதவர்கள் உபயோகிக்கும் உடல்மொழிக்கு ஒரு முறைமை அமைவுகள் உண்டு. இது படிப்பது போலப் பயிற்சி செய்வதால் வருவது. செம்மையான உடல் மொழியை புலன்நெறி வழக்கால் ஏற்றுக் கொள்ளலாம். இவ்வழக்கின் இன்னுமொரு பகுதியே பரத நாட்டியத்தில் வரும் அபிநயங்கள். புலன் நெறிவழக்கு மாறானது உலகியல் வழக்கு. உடல்மொழியின் உலகியல் வழக்கை 'சைகை' எனக் கொள்ளலாம். வாயால் சொல்லாது சைகை காட்டிச் செயல்படுபவர்கள் இருக்கிறார்கள். இந்த உலகியல் வழக்கே வாய்பேசாதவர்களுக்கு மட்டும் பயிற்றப்படும் புலன்நெறிவழக்காய் வளர்ந்திருக்கக் கூடும்.

உலக இனங்கள் அத்தனையும் தமது வாய்மொழிப்பேச்சால் பெற்றுக்கொள்ள முடியாத காரியங்களை உடல் மொழிவீச்சால் இன்றும் பெற்றுப்பயன் அடைகின்றன. இனிமேலும் இது தொடரும் இதனாலேயே உலகப்பொதுமொழி யாகும் சிறப்புத்தகுதி உடல்மொழிக்கே உண்டு. உடல் மொழியை உபயோகித்தவர்கள் மனிதர்கள் மட்டுமல்லர். உடலைக் காட்டாது உரையைக்காட்டிய அசரீரிவாக்கியங்கள் ஆன்மீகத்தளத்தில் பதிவாகியுள்ளன. அசரீரி வாக்கியங்களை உதிர்த்த கடவுள் 'கண்ணால் கருணை காட்டியிருக்கிறார். கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி' என்கிறது திருவாசகம். இதனை சமஸ்கிருதத்தில் நயன-பாஷை என்றனர். நயன தீட்ஷை என்றும் ஒன்றுண்டு.

திருக்குறளிலும் உடல்மொழி உபயோகம் பற்றிய குறிப்புகள் பல உண்டு. தமிழ் மொழியால் மட்டுமே திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் உடல்மொழிப் பாவனைபற்றியக் கூறவேண்டி வந்தமை சிந்திக்கப்படவேண்டியது. உலகில் எல்லா இனமக்களும் உபயோகத்தில் வைத்திருக்கும் உடல் மொழியானது இலக்கியங்களில் இயல்பாகவே கலந்திருக்கும்.

**'கண்ணொடு கண்இணை நோக்கு**
**வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல'**
**'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்'**

அந்நூற்றாண்டில் மட்டுமல்ல இந்த நூற்றாண்டிலும் உடல்மொழி உபயோகம் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். 'கண்கள் இரண்டல்ல... கண்கள் இரண்டால் என்னைக் கட்டி இழுத்தாய்' என்கிறது ஒரு திரைப்படப்பாடல். வாயால் வார்த்தையால் கூவி அழைப்பது போன்று கண்களால் அழைப்பதை இது சுட்டுகிறது. இன்றைய தொலைக்காட்சிகளில் சிலநேரங்களில் செய்தி வாசிக்கும்போது ஒரு மூலையில் உடல் மொழியால் உரைப்பவரையும் காட்டுகிறார்கள்.

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் தனது உடல்மொழியைக் கண்டு கொள்ளளும்படி வாய் மொழியால் கேட்பது அற்புதமான காட்சியாகும்.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 23ஆம் பக்கம்

God's **Love**
is the only **Hope**
**for Sri Lanka.**



We invite you to meet an extraordinary Sri Lankan-Canadian woman whom God called to be a missionary in her native land.

Sherine Kara is actively involved in meeting the physical and emotional needs of a people devastated by the effects of war and catastrophes. Be inspired by her story as she shows the love, hope and grace of an Almighty God.

SUNDAY JUNE 21ST, 2009, 11AM

LIGHT OF THE WORLD MINISTRIES
1335 Morningside Ave., Unit 4
Scarborough, ON
416-284-0413 · www.lowm.ca

# உங்கள் கரங்களும் இணையட்டும் . . . . . .










யுத்தம் வன்னியில் தொடங்கிய நாளிலிருந்து வவுனியா ஆஸ்பத்திரியில் காயப்பட்டு ஒன்றுமில்லாமல் வந்த மக்களின் உடனடித் தேவையை சந்தித்து வந்ததுடன். அற்பத குடும்ப பராமரிப்பு (Miracle Family Care) ஸ்தாபன அதிபர் டேவிட் லோகநாதன் ஒருவாரத்திற்கு முன்னர்தான் முகாம்களுக்கு சென்று மக்களை நேரில் சந்தித்து உதவியும் வந்திருக்கிறார்.

- இதுவரை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் $50,000.00 மேலாக செலவளித்திருக்கிறோம்.
- கர்ப்பவதிகள், மாணவர்களின் படிப்பிற்கான தேவைகளுக்கு வவுனியா அரசாங்க அதிபரிடம் இருந்து உதவிகள் கோரப்பட்டிருக்கிறது. ( மாணவர் அப்பியாச புத்தகங்களுக்கு உடனடித் தேவை $ 8,000.00 )
- இன்னும் அனேக தேவைகள் உண்டுஇ உங்கள் உதவி எங்களுக்குத் தேவை.

தயவு செய்து எங்கள் மக்களின் கண்ணீரைத் துடையுங்கள். அவர்கள் அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்பட உதவி செய்யுங்கள். உங்கள் ஒவ்வொரு கொடுப்பனவுகளுக்கும் வருமானவரி கழிவுக்கான ரசீது வழங்கப்படும். எங்கள் வேலைத்திட்டங்கள், கணக்கு விபரங்கள் யாவும் இணையத்தளத்தில் கொடுக்கப்படும்.

என்பது அக்குறள். ஒரு பிறப்பில் ஒருவர் கற்றுக்கொள்ளும் கல்வி (மொழி) அவருக்கு ஏழுபிறப்பிலும் தொடர்ந்து உதவும் என்கிறார்.

***'Body, Language has been Called the Universal language'***


## TENNIS LESSONS

By Australian certified, U.S trained professional former Srilankan Davis cup player and Coach catering for scarborough, Markham & Richmond Hill Areas. 36 years of experience. Group Classes & Private Coaching Possible

**David Selvadurai : 416.495.1277**



## Driving School



- ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை
- நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
- *G1, G2* தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
- வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்
- நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி - General Driving School

Ministry of Transportation Approved Instructor - **பேரின்பநாதன் வேந்தன் - 416-731-2829**

**Email: venthanctr@yahoo.com**


# தந்தையர் புகழ்மாலை



பல்லவி

தந்தையர் புகழ்தனைப் பாடிடுவோம் - எங்கள்
தங்கமாம் அவர்பெயர் போற்றிடுவோம் (தந்தையர்)

அனுபல்லவி

சிந்தைகவர்ந்திடும் சீலர் அவர் - எம்மேற்
சிரத்தையெடுத்திடும் செம்மல் அவர் (தந்தையர்)

சரணம்

நேசமும் பாசமும் கொண்டவர்தான் - தந்தை
ஆசையாய் கேட்பவை அளிப்பவர்தான்
ஆசானெக்கவர் எவ்விடத்தும் - எங்கள்
அன்னையர் காட்டிய தெய்வமவர் (தந்தையர)

அவைகளில் முந்தியே நாமிருக்க - அவர்
அடைந்திட்ட துயரெல்லாம் நாமறிவோம்
வறுமையை நாமென்றும் அறியாமல் - எமை
வளர்த்திட ஆயிரம் பணிசெய்தார். (தந்தையர்)

என்மனக்கோவிலில் உறையுமப்பா - நீங்கள்
மண்ணினில் நாம்காணும் தெய்வமன்றோ!
நல்லதே எண்ணிடும் எங்களப்பா - நீங்கள்
பல்லாண்டு வாழ்க பார்போற்றிடவே.




- ஆக்கம் அருட்கவி
ஞானகணேசன்

# அழகான கதை...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

**சில கேள்விகளுக்குரிய பதில்கள்**

வாங்குவதா? வாடகைக்கு தொடர்ந்து இருப்பதா சிறந்தது? பொதுவாக இந்த கேள்விக்குரிய பதில், தனிப்பட்டவரின் பொருளாதார நிலைமையிலேயே தங்கியுள்ளது. இன்றைய காலகட்டத்தில் வட்டிவீதம் மிகக்குறைவாக இருப்பதால், மாதாந்த அடமானக்கடன், பொதுவாக செலுத்தப்படும் வாடகையை விடக் குறைவாகவே காணப்படும்.

பொதுவாக நீண்ட காலத்தில் வீட்டின் பெறுமதி அதிகரித்தே செல்லும் (தகுந்த இடத்தில் (Location, Location, Location) வாங்கிய வீடுகள்) அத்துடன் குடியிருக்கும் (Principal Home) வீட்டில் ஏற்படும் விலை அதிகரிப்பிற்கு வரி செலுத்த வேண்டிய அவசியம் கிடையாது.



ஆனால் சிலர் முதலீட்டிற்குரிய பணம் சேர்க்கும் வரை பொறுத்திருப்பது நல்லது. போதிய முதலீடு இருந்தால், வாங்குவதனைப்பற்றி சிந்திக்கலாம். விலைகுறையலாம் என நினைத்து பொறுத்து இருப்பது சிலவேளை கவலையைத் தான் தரலாம்?

**எவ்வாறான அடமானக்கடன் சிறந்தது?**
முக்கியமாக வாங்குபவர் முதலாவது தடைவயாக வீடு வாங்குகின்றாரா, இரண்டாவது தடவையா அல்லது மூன்றாவது தடவையா என்பதற்கு ஏற்ப முடிவுகள் மாறலாம்? அவர்களிற்கேற்ப ஆலோசனைகளும் மாறலாம்.

வட்டிவீத மாற்றம், ஏற்படுவதைக் கொண்டு எதிர்வு கூறுவது இலகுவானதல்ல! அத்துடன் வட்டிவீதம் எந்த திசையில் போகும் என்பதனை பொறுத்தே முடிவு அமையும்.

கடந்த கிழமைகளில் கனடிய டொலரின் பெறுமதி அதிகரிக்கின்றது. மறுபக்கத்தில் கனடிய கடன் எதிர்பாராதளவு அதிகரித்து (50 Billion Dollar) செல்கின்றது) தொழில் இழப்பவர்கள் அதிகரிக்கின்றார்கள். பெரிய பெரிய வாகனக்கம்பனிகள் பொருளாதார நெருக்கடியில் உள்ளன பெரிய நிதி நிறுவனங்களின் வருமானம் குறைகின்றது.

இவ்வாறு நிலைமைகள் நாலாபக்கமும் செல்கின்றது. இதனால் கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் எந்த திசையில் செல்லலாம் எனத் தெளிவாகக் கூறமுடியாத நிலைமை.

கடந்த வருடங்களிற்கு முன்பாக Variable Rate பணத்தைச் சேகரிக்க கூடியதாக இருந்தது (பொதுவாக Variable வட்டிவீதம் = முதன்மை வட்டிவீதம் (Prime Rate) - 1% ஆகக் காணப்பட்டது.

ஆனால் இப்பொழுது Prime Rate + 1% ஆக மாறிவிட்டது. சில சந்தர்ப்பங்களில் Prime Rate +½% இதனால் சேமிப்பு குறைந்து விட்டது. அத்துடன் நீண்டகால மாறாதவட்டிவீதம் (Close Mortgage Rate) 3.5% - 3.60% (5 வருடத்திற்குரியது) பெறக்கூடியதாக உள்ளது.

இருந்தும், வாங்குபவரின் பொருளாதார நிலைமையில் எது சிறந்ததாக கருதுகின்றாரோ அதுவே சிறந்தது. தனிப்பட்டவரின் பொருளாதார நிலை ஏற்க இருக்கும் Risk போன்றவற்றில் தங்கியுள்ளது.

**குறிப்பு:**
**அடமானக்கடனைப் பற்றிய சில தகவல்கள்**

1. பொதுவாக நிதி நிறுவனங்களினால் அறிவிக்கப்படும் அடமானக்கடனிற்குரிய வட்டிவீதத்திலிருந்து 1.68% வரையான கழிவு கிடைக்கப்பெறுகின்றது. (உதாரணமாக அறிவித்த 5 வருடத்திற்கு அடமானக்கடன் வட்டிவீதம் 5.53% ஆயின் கழிவிற்கு பிறகு கிடைக்கும் வட்டிவீத (5.30 - 1.68) = 3.62% ஆகும்.

2. 2008ஆம் ஆண்டு இளவேனிற்காலத்திற்கும் (Spring 2008) 2009ஆம் ஆண்டு இளவேனிற்காலத்திற்கும் இடையில் பெறப்பட்ட அடமானக்கடனில் 36% ஆன கடனின் வட்டி.....Variable Mortgage ஆகவே காணப்பட்டது.

3. இன்றைய காலகட்டத்தில் கனடாவில் 28% ஆன அடமானக்கடன் Variable Mortgage ஆகவே காணப்படுகின்றது.

4. இன்றைய அடமானக்கடனில் 1% ஆனவை ஒரு வருடத்திற்குரிய மோட்கேஜ் கடனைத் திருப்பிக் கொடுக்கும். காலத்தைக் கொண்டவை (Amortization Period)

5. 40 வருடமாக இருந்த Amortization இப்பொழுது முற்றாகவே நீக்கப்பட்டு விட்டது. ஆகக்கூடிய காலம் 35 வருடமாகும்.

6. கடந்த வருடத்தில் அடமானக் கடனை திருப்பிப்பெற்றவர்கள் (Renewed Mortgages) 72% ஆனவர்களின் வட்டிவீதம் குறைந்தே காணப்பட்டது.

**Tips for Keeping Your Credit Rating High**
1. குறிப்பிட்ட காலத்திற்கும் மிகக்குறைந்த கடனை திருப்பி செலுத்துதல் இயலும் என்றால் மிகக்குறுகிய பெறுமதியை விட அதிகமாகச் செலுத்துதல்.
2. குறிப்பிட்ட Minimum Payment செலுத்த முடியாத நிலையில், குறிப்பிட்ட கடன் நிறுவனத்தை அழைத்து காரணத்தை விளங்கப்படுத்துதல்.
3. கொடுக்கப்பட்ட Credit Limit இன் 75% இற்கு குறைவான தொகையை பாவித்தல்.
4. குறிப்பிட்ட கால எல்லையில் Credit History Check பண்ணவேண்டும். (Equifax (equifax.ca), TransUnion Canada இல் பெறமுடியும்.
5. கடன் பழு ஏற்படப்போவது என எதிர்பார்த்தால் ஆகக்கூடிய வட்டிவீதமுள்ள கடனை குறைந்த வட்டி வீதத்துடன் ஒன்றாக்குதல்.
6. கடினமான முடிவுகளை துணிந்து எடுத்தல். உதாரணமாக மாதாந்த கொடுப்பனவு செலுத்துவது கஷ்டமாக இருந்தால் வீட்டை விற்றல் சிறந்த முடிவாகலாம்.

# குருதிச்சுற்றோட்ட...

10ஆம் பக்கத்தொடர்ச்சி



இந்நிலை காணப்படின் அடிக்கடி தங்கள் வைத்தியர்களை நாட வேண்டும். பெண்களுக்கு பல காரணங்களினால் இரத்த அழுத்தம் ஏற்படும். சிலருக்கு குடும்பகட்டுப்பாட்டு மாத்திரைகளினால் ஏற்பட வாய்ப்புண்டு எனவும் கூறப்படுகின்றது. மேலும் இரத்தக் கொதிப்பை குறைக்க யோகாசனம் சிறந்த பயிற்சியாகும். யோகாசனத்தை செய்வதனால் மனத்தைக்கட்டுப்படுத்தும் வலு ஏற்படும்.

இரத்த அழுத்தம் பரம்பரையாகவும் வரும் எனவும் கூறப்படுகின்றது. இருந்தும் சிறுநீரகப்பாதிப்பு, அதிக உப்பு, புகை, மது என்பவற்றாலும் தவிர்க்க முடியாத கவலைகளினாலும் ஏற்பட வாய்ப்புண்டு. இரத்த அழுத்தம் இருதயம், சிறு நீரகம், மூளை, இரத்தக் குழாய்களைத் தாக்கிப் பாதித்து வாழ்நாட்களை குறைக்கும். எனவே உடல் எடை குறைய வேண்டும். உப்பு, மது, புகை, கவலை யாவற்றையும் தவிர்க்க வேண்டும். அத்துடன் ஊறுகாய், கருவாடு போன்றவற்றையும் அதிகம் பாவிப்பது நன்றன்று.

பெரும்பாலும் ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கு இரத்த சோகை ஏற்படுவது அதிகம். மாதவிடாயின் போது அளவுக்கு அதிகமான இரத்தம் வெளியேறுவதால், அல்லது பிரசவகாலத்தில் அதிக இரத்தம் கழிதல், உடம்புக்குத் தேவையான இரும்புச்சத்து குறைதல் என்பதனால் பெண்கள் நன்கு போசாக்கான உணவுகளைக் கையாளுவதுடன் இரும்புச்சத்து உணவுவகைகளையும் சாப்பிட்டு வரவேண்டும். இந்நிலையைத் தங்கள் வைத்தியர் கூறுவார். நன்கு கேட்டு அதன்படி நடந்துகொள்ளுங்கள்.

இரத்த அழுத்தம் என்றால் சிலருக்கு விளங்காமல் இருக்கலாம். இரத்தக்குழாய் மூலம் இரத்தம் செல்லும்போது அதன் சுவர்களில் ஒருவிதமான அழுத்தத்தை உண்டாக்கும். அதுவே இரத்த அழுத்தம் (Blood Pressure) ஆகும்.

இருதயம் ஒவ்வொருமுறை துடிக்கும் போதும் பெரிய இரத்தக்குழாய்களில் ஏற்படும் இரத்தத்தின் அதிகபட்ச அழுத்தம் (Systolic) 120 என்றும், குறைந்த அளவு அழுத்தம் (Diastolic) 80 என்றும் கூறப்படுகின்றது. இந்தஅளவு கூடினாலும், குறைந்தாலும் தகுந்த சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். எனவே எதற்கும் தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் நன்கு பரீட்சித்து தகுந்த ஆலோசனைகளையும், சிகிச்சையையும் பெற்றுக்கொள்ள முடியும்.

APARTMENTS FOR RENT



In a NEWLY Renovated High-Rise Apartment Building
Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby

Pl. Call: 416.264.2818

# “யுத்தத்தை நிறுத்த நாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் சிலரின் சுயநலத்தால் பலி கொடுக்கப்பட்டது”

## நேர்காணல்: கனிமொழி

கனிமொழியிடம் நிறைய மாற்றங்கள். நிதானமாகவும் மிகத் தயக்கத்துடனும் பேசும் கவிஞர் கனிமொழி இல்லை இவர். அரசியல்வாதி கனிமொழி, உறுதியுடனும் வேகமாகவும் பேசுகிறார். எப்படிப்பட்ட கேள்வியாக இருந்தாலும், வேண்டாம் என மறுக்காமல், உடனே பதில் சொல்லுகிறார். இந்தியப் நாடாளுமன்றத் தேர்தல், மத்திய அமைச்சரவை பதவியேற்பு, நாடாளுமன்றக் கூட்டத்தொடர் என தொடர்ச்சியான பரபரப்புகள் முடிந்து கொஞ்சம் ஆசுவாசம் அடைந்தவரை, ஒரு சனிக்கிழமை மாலையில் சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

கேள்வி: இலங்கையில் அந்நாட்டின் ராணுவம் தமிழர் பகுதிகளில் நடத்தி வந்த யுத்தத்தை நிறுத்த, இலங்கை அரசை இந்தியா நிர்பந்திக்க வேண்டும் என வலியுறுத்தி, இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்யலாம் என முடிவு செய்தபோது, முதலில் ராஜினாமா கடிதம் கொடுத்தவர் நீங்கள். ஆனால், அதன்பிறகு தமிழகத்தில் நடைபெற்ற அரசியல் நடவடிக்கைகள் எல்லாம், இலங்கையில் தினமும் யுத்தத்தில் செத்துக்கொண்டிருந்த தமிழர்களை காப்பாற்றுவதற்கு எந்தவகையிலும் உதவவில்லை. ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் திமுக கட்சியும் தமிழக அரசும் நடந்துகொண்டது சரிதான் என நினைக்கிறீர்களா?

கனிமொழி: ஈழத் தமிழர்கள் விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரைக்கும், நாங்கள் என்னென்ன முயற்சிகள் எடுத்தோம், யார் யாருடன் என்ன பேசினோம் என்பதை இப்பொழுது வெளிப்படையாக சொல்லமுடியாது. என்றாலும், சில அரசியல்வாதிகளின் சுயநலத்தால் எங்கள் முயற்சிகள் பலிகொடுக்கப்பட்டது என்பது மட்டும் உண்மை. அப்பொழுது உடனே நாம் கவனம் செலுத்தவேண்டிய பிரச்சினை என்றிருந்தது யுத்தம்தான். சண்டையில், ஒரு நாளைக்கு ஆயிரக்கணக்கானவர்கள் வீதம், தினமும் அப்பாவி மக்கள் செத்துக் கொண்டிருந்தார்கள். எனவே, முதலில் யுத்தத்தை நிறுத்துவதற்கு வழிசெய்வோம் என்று முடிவெடுக்கப்பட்டு, அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. அது வெற்றிகரமாக முடியும் தருவாயிலும் இருந்தது. ஈழத் தமிழர் விவகாரங்களை வைத்து இங்கே தமிழகத்தில் அரசியல் செய்து கொண்டிருப்பவர்கள், பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டால், விரைவில் வர இருக்கும் தேர்தலை எதிர்கொள்ளவும் தொடர்ந்து அரசியல் செய்யவும் தங்களுக்கு விசயம் இருக்காது என்று, அப்பொழுது பிரச்சினையை முடிக்கவிடாமல் திட்டமிட்டே பல்வேறு முட்டுக்கட்டைகளை உருவாக்கினார்கள். ஆயிரக்கணக்கில் தினமும் பலியாகிக் கொண்டிருந்த மனித உயிர்கள் சம்பந்தப்பட்ட விசயத்தில்கூட, ஓட்டு அரசியலுக்கு அப்பாற்பட்டு செயல்பட வேண்டும் என்னும் குறைந்தபட்ச மனித நேயம்கூட அவர்களிடம் இல்லை.

கேள்வி: விடுதலைப்புலிகள் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்செல்வன் இறந்தபோது கலைஞர் கவிதை எழுதினார். ஆனால், பிரபாகரன் மரணம் பற்றி இதுவரை ஒருவார்த்தைகூட சொல்லவில்லையே?



கனிமொழி: பிரபாகரன் மரணம் பற்றிய செய்திகள் இன்னும் உறுதி செய்யப்படாமல் குழப்பமாகவே நீடிக்கிறது என்பது முக்கியமான காரணம். இப்பொழுது அங்கே யுத்தம் நின்றுவிட்டாலும் தொடர்ந்து நிலமை மோசமாகத்தான் இருக்கிறது என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. முக்கியமாக முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள மக்கள்

தொடர்ச்சி 30ஆம் பக்கம்



# பேரண்டக் கதை - கலிலியோ

கெப்பினரின் கோள்களின் இயக்கங்களுக்கான விதிகளை நிறுவிக் காட்டிய நியூட்டன், கதிரவனுக்கும் கோள்களுக்கும் இடையே செயற்பட்ட மர்மமான விசை எனக் கெப்பினரினால் குறிப்பிட்ட விசையை 'ஈர்ப்புவிசை' எனக் கூறினார். அப்பிள் பழம் மரத்தில் இருந்து கீழே விழுவதும், சந்திரன் பூமியை வலம் வருவதும் இந்த ஈர்பபுவிசையின் காரணமாகத்தான் என நியூட்டன் கூறினார். சந்திரன் பூமியை வலம் வருவதுபோல எமக்குத் தோன்றினாலும் உண்மையில் சந்திரனாது ஒவ்வொரு கணமும் பூமியை நோக்கி விழுந்து கொண்டுதான் இருகின்றது எனக் கூறிய நியூட்டன், அதனை ஈர்ப்பினைக் கொண்டு விளங்கப்படுத்தியும் இருந்தார். இது பற்றிய மேலதிக தகவல்களுக்கு 'புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள்' எனும் எனது நூலினையும் பார்க்கலாம்.

வானவியலில் பெரும் திருப்பத்தினை நியூட்டனின் இயக்கவிதிகளும் ஈர்ப்புவிதியும் ஏற்படுத்தின. முதலில் கதிரவமையக் கொள்கையானது வானவியலாளர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நியூட்டனின் நிறுவல்களினால் வானவியலாளர்களுக்கு வேறுவழியே தெரியவில்லை. இதன் விளைவானது இன்னொரு நல்ல விடயத்தினையும் பெறும்பேறாகத் தந்தது. விஞ்ஞானம், வானவியல் என்பன முற்றாகவே மதங்களின் வழியில் நின்றும் விலகித் தனியாகவே பார்க்கப்பட்டது, ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. இதன் காரணமாக வானவியலாளர்கள், தங்கள் தங்கள் கண்டு பிடிப்புகளை எதிர்வுகூறுதல்களைச் சுயாதீனமாக, தைரியமாகக் கூறக்கூடியதாக இருந்தது. இன்னொரு விடயத்தினையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. விஞ்ஞான விளக்கங்கள் மதங்களின் வியாக்கியானங்களுடன் பொருந்துகின்றனவா என்ற ஒப்பீட்டு நிலை மாறி, மதவியாக்கியானங்கள் விஞ்ஞான விளக்கங்களுக்கு ஏற்புடையனவாக



## பிரபஞ்சம் - 42

உள்ளனவா என்ற நிலைமையும் தோற்றுவித்தன. ஆனாலும் நியூட்டன் ஒரு தீவிர ஆன்மீகவாதி என்பதனையும் மீண்டும் ஞாபகப்படுத்துகின்றேன்.

வானவியலில் பெரும் திருப்பத்தினை ஏற்படுத்திய நியூட்டனின் ஈர்ப்புவிதியையும், இயக்கவிதிகளையும் இங்கு குறிப்பிடலாம் என எண்ணுகின்றேன். கெப்பினர், கலிலியோ இருவரும் இவற்றிக்கு அடி எடுத்துக் கொடுக்க, நியூட்டன் அவற்றினைச் சிறப்பாக முடித்து வைத்தார்.

**ஈர்ப்பு விதி**

நியூட்டனை பெயர் பெற்றவராக்கியது இந்த ஈர்ப்புவிதிதான் என்றால் அது மிகையானது அல்ல. பேரண்டத்தில் உள்ள அத்தனை பொருட்களுமே ஒன்றை ஒன்று கவர்ந்து கொண்டு அதாவது ஈர்த்துக்கொண்டு இருக்கின்றன என்றார். நியூட்டன் இந்த ஈர்ப்பினால் ஒவ்வொரு பொருளும் அனுபவிக்கும் விசையே ஈர்ப்பு விசையாகும். பொதுவாக எடுத்துக் கொண்டோமேயாயின் பேரண்டத்தில் உள்ள எந்த இரண்டு பொருட்களையும் எடுத்துக்கொண்டாலும், அவை சிறிய பொருட்களோ அல்லது பெரிய பொருட்களோ, ஒன்றை ஒன்று கவர்ந்து கொண்டு இருக்கின்றன. இந்த, கண்களுக்குத் தெரியாத, மர்மமான விசையை ஈர்ப்பு விசை என்றும், இப்படியாகக் கவரும் இயல்பை ஈர்ப்பு எனவும் நியூட்டன் கூறினார். கண்களுக்குத் தெரியாத இக்கவர்ச்சி விசையின் பருமனுக்கு ஒரு சூத்திரத்தையும் நியூட்டன் தந்தார். அதுவே ஈர்ப்பு விதியின் கணித வடிவமாகிறது. அதன்படி ஈர்ப்புவிதியானது, "இரண்டு பொருட்களுக்கு இடையேயான ஈர்ப்பு விசையானது அப்பொருட்களின் திணிவுகளின் பெருக்குத் தொகைக்கு நேர்விகித சமனாகவும், அப்பொருட்களுக்கு இடையேயான தூரத்தின் வர்க்கத்திற்கு நேர்மாறு விகித சமனாகவும் இருக்கும்" ஆகும்.

இரண்டு திணிவுகளின் பருமன்களும் முறையே $m_1$, $m_2$ எனவும் அவற்றிக்கு இடைப்பட்ட தூரம் $d$ எனவும் கொண்டால் இரண்டு பொருட்களும் ஒன்றை ஒன்று கவரும் ஈர்ப்பு விசையின் பருமனை $f$ எனவும் எடுத்தால் $F = G \; m1 \times m2 / d^2$ ஆகும்.

இச்சூத்திரத்தை நியூட்டனின் ஈர்ப்பு விதியின் கணித வடிவம் என்பார்கள். இங்கே $G$ என்பதனை ஈர்ப்பு மாறிலி என்பார்கள். அதாவது $G$ இன் பெறுமானமானது எப்பொழுதும் மாறாத ஒன்றாகும்.

பௌதீகப் பாடமோ அல்லது கணிதப் பாடமோ நடத்துகிறேனோ என எண்ணிவிடாதீர்கள். பேரண்டம் பற்றிய இரகசியத்தை பேரண்டத்தின் வடிவத்தினை மெதுமெதுவாக அம்பலப்படுத்தத் தொடங்கிய விதி, அல்லது சமன்பாடு இது என்பதால் இதனைத் தரவேண்டிய, குறிப்பிடவேண்டிய அவசியம் ஏற்பட்டது அவ்வளவு தான்.

இனி அடுத்த தடவையில் நியூட்டனின் இயக்கவிதிகள் மூன்றினையும் பார்த்துவிட்டு, பேரண்டக்கதையினைத் தொடருவோம்.



**- கனி -**






அத்தனை குழம்பும்
அத்தனை ருசி...!
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED CURRY (CHILLI) POWDER
900g
தரத்திலும் No.1
ஆரோக்கியத்திலும் No.1
இப்போது புதுமையிலும் No.1
Niru BRAND ®
வறுத்த மிளகாயத் தூள்
நா நரம்புகள்
சிலிர்த்திடும் ருசி!
Marketing By Tamil Source
Niru
Niru
நிரு
பிராண்ட்
40 Minuk Acres, Scarborough, ON M1E 4Y6.
Tel: (416) 750-1976, Fax: (416) 750-8779
E-mail:info@niru.com

# வாதம் போக்கும் யோகா

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

மனித வாழ்க்கையில் நாம் அன்றாடம் வேலை செய்கின்றோம். நமது உடலையும் உள்ளத்தையும் பாதுகாப்பாகவும் நோய் நொடிகள் வராமல் வைத்திருக்க வேண்டாமா? அப்படி ஆரோக்கியமாக வாழ தினமும் யோகாசனமும் பிராணாயாமமும் பழக வேண்டும். நமது தினசரி வாழ்க்கையில் யோகாவுக்காக ஒரு அரைமணி நேரமாவது ஒதுக்கிவைக்க வேண்டும். அப்படிச் செய்து வந்தால் நம் உடலைப் பாதுகாக்கவும் எந்த நோய்களும் நம்மை அணுகாமல் இருக்கவும் இது அற்புதமான வழிமுறையாகும்.



பத்மாசனம்

இப்போதெல்லாம் மனிதர்களுக்கு புதுவகையான இனம் காணப்படாத பல நோய்கள் பரவத் தொடங்கியுள்ள. இவற்றுள் வாத நோய்கள் மூட்டுவாதம் பக்கவாதம், கீல்வாதம் (arthritis) என்று எலும்புகள் நரம்புகள் மூட்டு இணைப்புகள் சம்பந்தப்பட்ட நோய்கள் எத்தனையோ மருந்துகளை உபயோகித்த போதும் தற்காலிகமான ஆறுதலைக் கொடுக்குமே தவிர நோய் நீங்குதில்லை. பணச் செலவும் நேரமும் கவலையும் அவதியும்தான் மிச்சம். எனவே இவ்வாறான வாத நோய்களிலிருந்து விடுபட குறிப்பிட்ட சில யோகாசனங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை மதிய நேரத்தில் பழகுவதுதான் இந்த நோய்களிலிருந்து விடுபடும் உபாயம் என்று திருமந்திரம் கூறுகிறது.

எனவே மதிய நேரத்தில் ஆசனங்களைச் செய்து வந்தால் வாத நோய்களை முற்றிலும் குணப்படுத்தலாம். எலும்புகள் தேய்வதாலும், மூட்டுக்களுக்கிடையேயுள்ள குழம்பு (மஜ்ஜை) இறுகுவதாலும் வாத நோய்கள் வருகின்றன. இதற்கு வாத நோய்களை தீவிரமாக்கக்கூடிய உணவு வகைகளை முடிந்தவரை தவிர்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட சில யோகாசனப்பயிற்சிகளை மதிய வேளையில் பழகி வந்தால் வாத நோய்களிலிருந்து முழுமையாக விடுபடமுடியும்.

### ஆசனங்கள்



உட்கட்டாசனம்

### 1. உட்கட்டாசனம்

செய்முறை - விரிப்பில் நேராக நின்ற நிலையில் இரு பாதங்களையும் சுமார் ஒரு அடி இடைவெளியில் அகட்டி வைத்து முழங்கால் இடுப்புப் பகுதிகளை மடக்கித் தோள்பட்டைக்கு இணையாகவும், உள்ளங்கைகள் கீழ் நோக்கி இருக்குமாறும் நேராக நீட்டி நாற்காலியில் இருப்பது போல உடலை நிறுத்த வேண்டும். இதனை இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் செய்யலாம்.

### 2. பத்மாசனம்

செய்முறை - விரிப்பில் கால்கள் நீட்டி உட்கார்ந்து வலது காலை மடக்கி இடது தொடையிலும், இடது காலை மடக்கி வலது தொடையிலும் வைத்து முதுகுத் தண்டு கோணாமல் நிமிர்ந்து உட்கார்ந்து கைகளை முழங்கால்மீது வைத்து உள்ளங்கைகள் மேல்நோக்கி இருக்கும்மாறும் கண்பார்வை மூக்கு நுனியில் இருக்குமாறும் செய்ய வேண்டும். ஆரம்பத்தில் 15 வினாடிகள் வரை பழகி நாளடைவில் எண்ணிக்கையை அதிகரிக்கலாம்.

### 3. வஜ்ஜிராசனம்

செய்முறை - விரிப்பில் முழங்காலை மடக்கி மண்டியிட்டு உட்காரவும், முழங்கால் நன்கு தரையில் படிந்திருக்க வேண்டும். வலது கை,



வஜ்ஜிராசனம்

வலது முழங்காலிலும், இடது கை இடது முழங்காலிலும் வைத்து உடலை நன்கு நிமிர்த்த வேண்டும். ஆரம்பத்தில் பாதங்களின் மேல் பகுதியில் சிறு வலிகள் தோன்றலாம் அது நாளடைவில் சரியாகிவிடும்.

### 4. விபரீத கரணி

செய்முறை - விரிப்பில் கிழக்கு நோக்கி தலை வைத்துப்படுத்து கைகளைத் தரையோடும் உடலோடும் ஒட்டிவைத்து இரு கைகளையும் தோள்பகுதி தலைப்பகுதியைத் தரையில் அழுத்தி இருகால்களையும் மேலே தூக்கி இடுப்பையும் மேலே தூக்கவும். இரு கைகைகளையும் அந்தந்தப் பக்கத்து அடி முதுகில் அழுத்தியபடி பாதங்களைச் சற்று பின்னால் கொண்டு போகவும். அந்த நிலையில் உடலின் பாரம் முழங்கைகளில் தான் இருக்கும்.

### 5. பிராணாயாமம் - நாடிசுத்தி

நாடிசுத்தி செய்வதால் வாதம், பித்தம், சிலோத்துமும் நம் உடலில் சமநிலையை அடைகின்றன. அத்துடன் உடலிலுள்ள 72



பிராணாயாமம்

ஆயிரம் நாடி நரம்புகளும் சுத்தமடைகின்றன. வாதநோய் உள்ளவர்கள் இந்த வகையான



விபரீதகரணி

பிராணாயாமத்தையும் செய்து வந்தால் வாதநோயை முற்றிலுமாக குணப்படுத்தலாம். இதற்குரிய பிராணாயாமப் பயிற்சி முறைகளை ஒரு யோகாசன நிபுணரின் உதவியுடன் பழகுவதுதான் சிறந்தது.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

YARL
WINDOW BLINDS & DRAPERY
Since 1991
Tel.: 416-806-5397
905-201-7733
We have experience to make your home more beautiful ...
VENETIAN/VERTICAL
ROLLER/WOOD/FORMWOOD
BLINDS
WOOD & VINYL SHUTTERS
We are specialized in Custom Made Drapery & Blinds



Call :
N.SELVAM

YOGA - MEDITATION CLASSLESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# “டுவென்டி - 20...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

டென்னிஸ் தொடர்களில் பட்டம் வென்று அப்படியே தனது 19-வது வயதில் பிரெஞ்ச் ஓபன் கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்று சாதனை நிகழ்த்தினார். அதாவது தனது பதின்ம வயதில் கிராண்ட் ஸ்லாம் வென்ற வீரர் என்று இவர் புகழ் பெற்றார். 2002ஆம் ஆண்டு இவருக்கு 15 வயதாக இருந்த போது டெல்காடோவை ஒரு ஏ.டி.பி. டென்னிஸ் போட்டியில் வீழ்த்தி சிறுவனாக இருந்த போதே அசத்தியுள்ளார். அதேபோல் இவர் விம்பிள்டன் விளையாடும் போது வயது 17தான். இவர் 3-வது சுற்று வரை முன்னேறி 1984ஆம் ஆண்டு 16வயதில் பெக்கர் செய்த சாதனைக்கு அடுத்த படியாக திகழ்ந்தார். 2005ஆம் ஆண்டு முதல் தனது டென்னிஸ் வாழ்வின் உச்சத்தை எட்டிய நடால் அந்த ஆண்டில் மட்டும் 70 போட்டிகளில் வெற்றி பெற்றார். ஃபெடரர் அப்போது 81 போட்டிகளை வென்று முதலிடம் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மண் தரை டென்னிஸ் ஆட்டத்தில் 62 போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்று கில்லர்மோ விலாஸ் என்பவரின் சாதனையை முறியடித்தார் நடால். பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரை 2005, 2006, 2007, 2008ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்று சாதனை நிகழ்த்திய ரஃபேல் நடாலை பிரான்ஸ் ரசிகர்களுக்கு என்ன காரணத்தினாலோ பிடிக்கவில்லை. தொடர்ந்து அவர் விளையாடும் போதெல்லாம் அவருக்கு எதிராக நக்கலும் நையாண்டியும் செய்து வந்தனர். இந்த முறை கூட அவ்வாறு நிகழ்ந்தது. இதனை நடாலின் தந்தை கூட வன்மையாக கண்டித்தார். அதாவது “பாரிஸ் ரசிகர்கள் முட்டாள்கள்” என்று வர்ணித்தார். அதாவது இதற்கு ஒரு பின்னணி கூறப்படுகிறது. அதாவது 2006ஆம் ஆண்டு ஃபெடரரை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்ற போது ஃபெடரரை நடால் புகழ்ந்து பேசியதை பிரெஞ்ச் மொழியில் பெயர்த்துக் கூறிய நபர் தப்பும் தவறுமாக மொழி பெயர்க்க, ரசிகர்கள் இவர் தன்னைத்தானே புகழ்ந்து கொள்கிறார் என்று நினைத்துக் கொண்டு இவர் மீது அன்றிலிருந்து துவேஷம் பாராட்டுவதாக கூறப்படுகிறது. இந்த முறை அவர் தோற்ற போது கூட பாரிஸ் ரசிகர்கள் தன்னை ஏன் இவ்வாறு நடத்துகிறார்கள் என்று தனது குழப்பத்தை வெளியிட்டதோடு, வருத்தத்தையும் வெளியிட்டுள்ளார்.


யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361



றிப்ளக்ஸ்
REFLEX
COPY & DIGITAL PRINTING

B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS

1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS


வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம் - கனடா.

***VANNI TAMIL COMMUNITY AND CULTURAL CENTRE-CANADA.***

இலாப நோக்கற்ற அமைப்பு - Non profitable Organization – Reg. # 1333183.
2466 Eglinton Av East Ste# 402, Scarborogh (Ont), M1K 5J8, Canada.

றிச்மன்கில் திருமுருகன் 7ம் திருவிழா-2009

மேற்படி திருவிழா ஆண்டுதோறும் கனடா வாழ் வன்னி மக்களின் ஆதரவோடு கனடா-வன்னித் தழிழ்ச் சமூக கலாச்சார அமையத்தினால் விமரிசையாக முன்னெடுக்கப்பட்டதை யாவரும் அறிவீர். இவ்வாண்டு வன்னி வாழ் தமிழ் மக்களின் இன்றைய நிலையைக் கருத்திற் கொண்டு அமைதியான முறையில் அம்மக்களின் நலவாழ்வு வேண்டி 21-06-2009 ஞாயிற்றுக்கிழமை மாலை அபிசேகம் ஆராதனையோடு, கூட்டுப்பிரார்த்தனையும் இடம் பெறும் அனைவரையும் கலந்துகொண்டு கூட்டுப்பிரார்த்தனை செய்ய வருமாறு பணிவோடு வேண்டுகிறோம். கோவிலுக்கான நன்கொடை வழங்க விருப்பமுள்ளவர்கள் திருவிழா தினத்தன்று கோவிலின் சன்னிதானத்தில் சங்க நிர்வாகிகளிடம் வழங்கலாம். நன்றி.

மேலதிகதொடர்புகளுக்கு: நித்தி: 416-357 9474 கோபு: 416-901 3427
சிவா: 416-520 1214


HomeLife GTA Realty Inc., Brokerage*

Independently owned & operated

“Dream is yours responsibility is ours”

எமது நிறுவனம் பற்றிய சில தகவல்கள்

- 3 Brokers to Help / Assist
- Open 7 days And After Hours Services Availlable
- Regular Training Provided
- Exclusive Projects for HomeLife GTA Sales Agents Only (Better Prices And Deposit Structure for Buyers)
- 2 Branches: Scarborough & Mississauga
- Convenient Locations
- Private Room


Broker / Owner


Broker/Manager


Broker / Owner

To Join the Success full Respectful Team
Please Call @ 416.321.6969 / 905.712.2666
www.homelifegtarealty.com Email: gtarealty@gmail.com
1711 McCowan Rd. #206, Toronto / 145 Traders Blvd # 28, Mississauga

# “யுத்தத்தை நிறுத்த...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

எதிர்கொள்ளும் கஷ்டங்கள். அந்த மக்கள் மீண்டும் தங்கள் இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். சரணடைந்துள்ள போராளிகள் காப்பாற்றப்பட வேண்டும். எனவே, இப்பொழுதுதான் இன்னும் அதிகமாக இந்தியத் தமிழர்கள் அவர்களுக்கு உதவ முன்வர வேண்டும். தலைவர் கலைஞர் அவர்கள், பிரதமரையும் சோனியா அம்மையாரையும் சந்தித்தபோது இது சம்பந்தமாக பேசியுள்ளார். அவர்களும் நல்ல பதில்களைச் சொல்லியுள்ளார்கள்.

கேள்வி: நீங்கள் ராஜ்யசபா எம்.பி. ஆனபோது டெல்லி அரசியலில் உங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. ஆனால், தேர்தலுக்குப் பிறகான அரசியல் மாற்றங்களினால் இனிமேல் டெல்லியில் உங்களுக்கு அந்தளவுக்கு முக்கியத்துவம் இருக்காது எனச் சொல்லப்படுகிறதே. இதை எப்படி எடுத்துகொள்கிறீர்கள்?

கனிமொழி: பதவியை மட்டும் வைத்து ஒருவருக்கு தரப்படும் முக்கியத்துவத்தை அளவிட வேண்டியதில்லை. பதவி இல்லை என்பதற்காக நான் என் செயல்பாட்டை குறைத்துக்கொள்ளப் போவதுமில்லை.

கேள்வி: ஆனால், உங்கள் பெயரும் அமைச்சராக வாய்ப்புள்ளவர்கள் பட்டியலில் இருந்ததே?

கனிமொழி: குறைந்த வாய்ப்புகளும் நிறைய பேரும் இருக்கும் போது, கட்சிக்கு அதிக அழுத்தத்தைத் தர நான் விரும்பவில்லை. கட்சியில் என்னைவிட சீனியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாய்ப்புத் தரப்பட வேண்டும் என நினைத்தேன். எனவே, நானே ஒதுங்கிக்கொண்டேன்.

கேள்வி: கலைஞர் டெல்லிக்கு சென்று அமைச்சரவை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது சம்பந்தமாக வட இந்திய ஆங்கில ஊடகங்கள் மிகக் கடுமையான விமர்சனத்தை வைத்தன. அதிக அமைச்சர்கள் கேட்டதும், கலைஞர் தன் மகனுக்கே கேபினட் பதவி கேட்டதும் விமர்சனத்துக்குள்ளானது. அவற்றுக்கு உங்கள் பதில் என்ன?

கனிமொழி: சென்றமுறை திமுகவுக்கு 16 எம்பிகள் இருந்தார்கள். அப்பொழுது மூன்று கேபினட் அமைச்சர்கள், நான்கு இணை அமைச்சர்கள பதவி எங்களுக்குத் தரப்பட்டது. இப்பொழுது எங்களுக்கு 18 எம்பிகள் இருக்கிறார்கள். எங்கள் பலம் அதிகமாகியிருக்கும் போது, நாங்கள் அதிக அமைச்சர்கள் கேட்பதில் என்ன தவறு இருக்கிறது? நாங்கள் எங்கள் உரிமையைத்தான் கேட்டோம்.

அழகிரி அண்ணன் கேபினட் அமைச்சராகி இருப்பதைப் பொறுத்தவரைக்கும், தலைவரின் மகனாக மட்டும் பார்க்க முடியாது. நீண்ட நாட்கள் கட்சிக்குள்ளே ஒரு சிறிய பதவிகூட இல்லாமல் கட்சிக்காக உழைத்தவர் அவர். இந்நிலையில், தொண்டர்களே அவருக்கு ஒரு சரியான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என நினைத்தார்கள். அதுதான் இப்பொழுது வழங்கப்பட்டுள்ளது. மேலும், அமைச்சரவையில் தென் மாவட்டங்களுக்கு ஒரு பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்னும் பொழுது இயல்பாகவே அவர் பெயர்தான் முன்னால் வைக்கப்பட்டது.

கேள்வி: தமிழ்நாட்டு மாநில அரசில் காங்கிரஸுக்கு அமைச்சர் பதவிகள் கொடுக்க வேண்டும் என்ற குரல் மீண்டும் எழுந்துள்ளதே?



சந்திப்பு: விஜயவேலன்

கனிமொழி: உரியவர்கள் இதுபற்றி பேசினால் அதுபற்றி பேசலாம் என தலைவர் ஏற்கெனவே சொல்லியுள்ளார்.

கேள்வி: நீங்கள் நடத்திவரும் சங்கமம் நிகழ்ச்சி பற்றி பல விமர்சனங்கள் வைக்கப்பட்டாலும், அவற்றுக்கு அப்பாற்பட்டு அது அனைவராலும் வரவேற்கப்பட்டது. ஆனால், இப்பொழுது சங்கமம் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நாட்டுப்புறக் கலைஞர்களை திமுக கட்சி தேர்தல் பிரசாரத்தில் பயன்படுத்திய சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறதே?

கனிமொழி: அதில் என்ன சர்ச்சை இருக்கிறது என எனக்குத் தெரியவில்லை. சங்கமத்தில் மொத்தம் 1600 கலைஞர்கள் கலந்துகொண்டார்கள். அதில் பல்வேறு இயக்கங்களையும் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் கலந்து இருந்தார்கள். கட்சி சாராத தன்னார்வக் குழுவினரும் இருந்தார்கள். எந்தக் கட்சியை சேர்ந்தவர் எனப் பார்த்து நாங்கள் அவர்களை சங்கமம் நிகழ்ச்சிக்கு அழைக்கவில்லை. முதல் சங்கமம் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கலைஞர்கள், தொடர்ந்து தங்கள் கட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்து வந்தார்கள். அதற்காக இரண்டாவது சங்கமம் நிகழ்ச்சியில் நாங்கள் அவர்களை அழைக்காமலும் இருக்கவில்லை.

இந்தத் தேர்தலிலும் அந்தக் கலைஞர்கள் கம்யூனிஸ்ட் கட்சி பிரசாரத்தில் பயன்படுத்தப்பட்டார்கள். அதுபோல்தான் திமுக கட்சியைச் சேர்ந்த கலைஞர்கள் திமுக பிரசாரத்துக்கு அழைக்கப்பட்டார்கள். கிட்டத்தட்ட 600 கலைஞர்கள் தேர்தலில் திமுகவுக்காக உழைத்தார்கள். இவர்கள் ஏற்கெனவே பல தேர்தல்களில் திமுகவுக்காக பிரசாரம் செய்தவர்கள்தான். இந்த முறை அவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து ஒரு ஒழுங்குடன் செய்தோம், அவ்வளவுதான். இந்த 600 பேரில் சங்கமம் நிகழ்ச்சியில் ஒருமுறைகூட கலந்துகொள்ளாதவர்களும் இருந்தார்கள். நாங்கள் சங்கமம் நிகழ்ச்சியை அரசியலுக்கு அப்பாற்பட்ட தமிழர்களுக்கான ஒரு கலை இயக்கமாகத்தான் செய்து வருகிறோம். தொடர்ந்தும் அப்படித்தான் செய்வோம்.

கேள்வி: மகளீருக்கான 33 சதவிகித இடஒதுக்கீட்டை வலியுறுத்திய பேரணியுடன்தான் உங்கள் அரசியல் பிரவேசமே நிகழ்ந்தது. இப்பொழுது, மத்திய அரசின் முதல் நூறு நாள் திட்டத்தில் மகளீர் இடஒதுக்கீட்டை அமல்படுத்துவோம்னு சொல்லியிருக்காங்க. இந்நிலையில் மாநில அரசிலும் மகளீர் இடஒதுக்கீட்டை அமல்படுத்தி, ஒரு முன்மாதிரி மாநிலமாக தமிழகம் விளங்க, நீங்கள் கலைஞருடன் பேசுவீர்களா?

கனிமொழி: திமுக கட்சியும் சரி, தலைவரும் சரி பெண்கள் உரிமைக்காக தொடர்ந்து போராடி வந்திருப்பவர்கள்தான். மத்தியில் மகளீர் இட ஒதுக்கீடு சம்பந்தமான கோரிக்கைகள் வருவதற்கு முன்பே, மாநில அளவில், பல்வேறு துறைகளில் 33 சதவிக-'தத்துக்கும் அதிகமாகவே பெண்களுக்கு ஒதுக்கீட்டை அவர்கள் அமல் செய்திருக்கிறார்கள். அது வெற்றிகரமாக செயல்பட்டுக்கொண்டும் இருக்கிறது. ஆனாலும் வேலைவாய்ப்பு, கல்வி ஆகியவற்றில் பெண்களுக்கான ஒதுக்கீட்டை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கை எனக்கு இருக்கிறது. நிச்சயம் அது சம்பந்தமாக நான் தலைவருடன் பேசுவேன். அவரும் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இட ஒதுக்கீடு என்பது இல்லாமலேயே, பல்வேறு துறைகளில் தம்தம் திறமைகளால் இந்தியா வில் பெண்கள் தனி முத்திரைகளை பதித்துவரும் காலம் இது. பெண் ஜனாதிபதி, பெண் சபாநாயகர், ஆந்திராவில் முதல் பெண் உள்துறை அமைச்சர் என சமீபத்திலேயே எவ்வளவு உதாரணங்கள். மீரா குமார் அவர்களை தனிப்பட்ட முறையில் எனக்கு நன்கு தெரியும். ஒரு பெண்ணைதான் கொண்டுவரவேண்டும் என்று முடிவுசெய்து, அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மிக இயல்பாக, அவரது திறமைகளுக்காக தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். சபாநாயகர் பதவிக்கு தான் மிகப் பொருத்தமானவர் என்பதையும், தன்னால் மிகச் சிறப்பாக செயல்பட முடியும் என்பதையும் ஏற்கெனவே அவர் நிரூபித்துள்ளார். மகளீர் மசோதா, பெண் சபாநாயகர் ஆகிய இரண்டும் புதிய அரசு பெண்களுக்கு அளித்திருக்கும் நம்பிக்கைகள்.

கேள்வி: அரசியலுக்கு அப்பாற்பட்டு பெண்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் வகையில் ஒரு பெண்கள் இயக்கத்தை உருவாக்குவது உங்கள் கனவுத் திட்டங்களில் ஒன்றாக ஆரம்பத்தில் இருந்தது. அது எந்தளவில் உள்ளது?

கனிமொழி: அதற்கான அடிப்படை வேலைகளை எல்லாம் முடித்துவிட்டோம். அப்பொழுதுதான், அதே திட்டத்துடன் தமிழகத்தில் இன்னொருவரும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் எனத் தெரிந்தது. யார் செய்தால் என்ன? செயல்பாடுதானே முக்கியம். எனவே, எங்கள் முயற்சிகளை தற்காலிகமாக நிறுத்திக்கொண்டோம். பிறகு, அவர்களும் அதைத் தொடரவில்லை. இப்பொழுதும், அப்படியொரு இயக்கத்துக்கான தேவை இருந்துகொண்டுதான் இருக்கிறது. செய்யவேண்டும் என்னும் ஆசையும் எனக்குள் குறையாமல் அப்படியே இருக்கிறது. பலருடன் பேசி நிச்சயம் அதை செயல்படுத்துவோம்.

கேள்வி: நீங்கள் அரசியலில் முழு கவனம் செலுத்தினாலும், உங்களுடைய அடையாளம் என்பது கவிதைகள்தான். ஆனால், இப்பொழுது நீங்கள் கவிதை எழுதுவதில்லையே. முன்புபோல் இலக்கியக் கூட்டங்களிலும் உங்களைப் பார்க்க முடிவதில்லை?

கனிமொழி: சமீபமாக பத்திரிகைகளில் என் கவிதைகள் வெளிவரவில்லை என்பது உண்மைதான். நேர நெருக்கடிகள் காரணமாக இலக்கியக் கூட்டங்களுக்கும் முன்புபோல் செல்ல முடிவதில்லை. ஆனாலும், நான் தொடர்ந்து எழுதிக்கொண்டும் படித்துக்கொண்டும்தான் இருக்கிறேன். நான் புதிதாக எழுதியுள்ள கவிதைகள் எல்லாம் சேர்த்து ஒரு புத்தகமாக விரைவில் வெளிவர இருக்கிறது. முன்பு அதிகமும் கதைப் புத்தகங்கள்தான் படிப்பேன். எழுத்தாளர் சுஜாதாகூட அதைக் கிண்டலடிப்பார். இப்பொழுது பல்வேறு துறைகள் சார்ந்து புத்தகங்களைத் தேடித்தேடிப் படிக்கிறேன். கவிதையும் புத்தகங்களும் என் சுவாசம், அதை எப்போதும் என்னால் விடமுடியாது.





ROADSPORT
HONDA
www.ROADSPORT.com
HONDA
Roadsport Honda
New & Used
Great Deals
Buy or Lease
Great Savings
Call Dan Lanka
RETAIL SALES MANAGER
Pioneer in Honda Sales in Toronto
Serving The Community Since 1996
Direct: 416-454-1107
A Truly Professional Service Provided To The Community.
940 Ellesmere Road. At Kennedy
For New or Used Hondas in Toronto Call Dan
or 416-291-9501 Ext. 2251

# என் அப்பாவை மன்னித்தல்



எனது அப்பாவை விமர்சித்து, அவரின் குற்றங்குறைகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்ததற்காக, என்னை மன்னித்துவிட இன்று உடன்படுகின்றேன்.

பிரபஞ்சத்தின் அகராதியில், அப்பா என்ற சொல்லிற்கு படைத்த இறைவன், கொடுப்பவர், மனம், பாதுகாப்பவர் என்றுதான் அர்த்தம். ஆகவே அப்பா என நீ அழைக்கும் போது இறைவன், கொடுப்பவன், மனம், பாதுகாவலர் என்றே பிரபஞ்சம் விளங்கிக் கொள்கின்றது.

உனது தந்தையை மன்னித்து விடு! இறை சந்நிதானத்தில் நீ சரியாகச் செயல்படுவதற்காக மட்டுமல்ல, உன்னுடனே நீ சரியாகச் செயல்படுவதற்காக அப்பாவை மன்னித்துவிடு. சரியான சமயத்தில் சரியான வார்த்தைகளைச் சொன்னாரோ இல்லையோ, உனது அப்பாவை மன்னித்துவிடு. தனது நேரத்தையும் சக்தியையும் உனக்காகச் செலவழித்தாரோ இல்லையோ பரவாயில்லை. உனது அப்பாவை மன்னித்துவிடு. வாழ்வின் பாடங்களை உனக்குக் கற்பித்தாரோ இல்லையோ, அப்பாவை மன்னித்துவிடு. உனது தவறான மனநோக்கினால், பிரபஞ்சத்தை நீ குழப்புகின்றபடியால் அப்பாவை மன்னித்து விடு. உன் அப்பாவில் நீ அடையாளங்கண்டு தூக்கிப் பிடிக்கும் குற்றங்குறைகளால் இறைவனை நீ தூற்றுகின்றாய் எனப் பிரபஞ்சம் விளங்கிக் கொள்ளும்.

அப்பாவின் குற்றங்குறைகள் என நீ கருதுபவை இறைவனில் நீ காண்பவை எனப் பிரபஞ்சம் பிழையாக விளங்கிக் கொள்ளுமாதலால், அப்பாவை மன்னித்துவிடு. அப்பாவுக்கெதிராக நீ இவ்வாறு தூக்கிப்பிடிக்கும் தீர்ப்புகள் உனது மனதில் நீ அநுபவிக்கும் குழப்பம், கோபம், அவமானம், வெட்கம் போன்ற எதிர்மறை உணர்வுகளை உருவாக்குகின்றன. உன் தந்தையை மன்னித்தாலன்றி நீ தேடும் அன்பும் ஆனந்தமும் உன் கைகளிற்கு ஒருபோதும் கிட்டாது. உனது அப்பாவை மன்னிக்காமல் உன்னைப்பற்றி நீயே உனக்கு உரைத்தவற்றிற்காக எப்படி உன்னை நீயே மன்னிக்கப் போகின்றாய்?.

உனது அப்பாவில் நீ காணும் குற்றங்குறைகளை, நீ இறைவனிடம் காண்பதாகத்தான் பிரபஞ்சம் புரிந்து கொள்ளும் என்பது இன்றுவரை உனக்கு விளங்காமல் இருந்திருக்கலாம். இன்று மனந்திறந்து இறைவனைப் பிரார்த்தித்துக்கொள். உனது அப்பாவை எடைபோட்டு விமர்சித்ததற்காக, உன்னை நீயே மன்னித்திட அவசியமான தைரியத்தையும் இரக்கத்தையும் உனக்கு அருளும்படி ஆண்டவரிடம் கேள். எனது தந்தையை விமர்சித்துத் தூற்றியதற்காக, இன்று என் இதயபூர்வமாக என்னை மன்னிக்கின்றேன்.




## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

149

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



**லலிதா புரூடி**


METRO APPLIANCES SALE & SERVICE LTD



- Fridge
- Dish washer
- Stove
- Microwave
- Washer
- Dryer
- Many More

Sale up to 80% off till June 30, 2009



புதிதாக வாங்குவதற்கும் திருத்த வேலைகளுக்கும் அழைக்கவும். பாவித்தவைகளும் விற்பனைக்கு உண்டு

674 Kennedy Road (kennedy & Eglinton)

416.454.4466 /416.298.4800



NuTek COMPUTERS

www.nuTechComputer.com

- ☑ Virus Removal
- ☑ Internet Sharing
- ☑ Computer Tune Up
- ☑ Computer Repair

அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்

416.587.1619

techsupport@nutechcomputer.com

Raj Paramasamy

A+ Certified PC Technician

Microsoft Certified Professional

SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க

எந்தவித அடமானக் கடன்களும் பெற

Direct - 416.575.5055

Anton Jeeva, P.Eng.

Real Estate Broker

Principal Mortgage

RE/MAX

House for sale $344,900



- Sawdon Dr
- Burns/Thickson/401
- Whitby
- 4 + 2 Bedrooms
- 4 Washrooms
- Finished bsmt
- Fridge, Stove, Dryer, washer, All Light Fixtures, All Window Coverings.

House for Sale $559,900



- Steppingstone Tr
- Steels & Staines
- 4 Bedrooms • 3 Washrooms
- Finished bsmt • Stove, Fridge, B/I Dishwasher, Washer & Dryer, All Window Coverings, All Electric Light Fixtures.Double Garage With opener

HOUSE FOR SALE $329,900



- Windbrook Grve
- Britannia/Terry Fox
- 2 - Storey Brick house
- 3 Bedrooms
- 3 Washrooms
- Fridge • Stove
- Electric Light Fixtures,
- Central Air Condition
- All Window Coverings

HOUSE For Sale $314,900



- Deerpark Cres
- Vodden/Williams Pkwy /Hwy10
- Bedrooms: 3
- Washroom: 4
- Fridge, Stove, Washer, Dryer, All Elf, All Window Coverings

CONDO.FOR SALE $199,900

McCowan & HWY 401



- Mccowan/Hwy 401
- 2 Bedrooms
- 2 Washrooms
- Elfs, Fridge, Stove, Newer Dishwasher, Built-In Microwave, Washer, Dryer, Window Coverings (Exclude Mbr Drapes), Broadloom W/ Laid .

Condo. for sale $249,900



- 83 Mondeo Dr. #112
- Birchmount & Ellesmere
- 2+1 Bedrooms
- 2 Washroom
- Fridge , Stove , Washer, dryer

HOUSE For Sale $339,900



- 29 Sawdon Dr. Burns/Thickson, • Whitby
- Bedrooms: 4 + 2
- Washrooms: 4
- 2 parking
- Finished BSMT
- Fridge, Stove, Washer, Dryer, All Window Coverings

Condo. FOR SALE $899,000



- Nymark Ave
- Leslie/Sheppard
- 5 + 4 Bedrooms
- 6 Washrooms
- Ample Car Park, Lovely Ceiling Heights, Beautiful Oak Staircase, Bright Spacious Large Windows, Skylight, A Definite Faire In The Air.

HOUSE For Sale $579,000



- Canal Rd E .
- Simcoe Rd /Canal
- Bradford West
- 23 acres of land
- 25 Minutes from Toronto • 2 Stoves
- 2 Fridges , Washer, Dryer..

CDN Financial & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO

REMAX VISION REALTY INC.

Speciallized in Power of Sale Homes

MAX 2000

விடுமுறை காலங்களில் சுற்றுலா செல்லத் தயாராகுங்கள்!

ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது கிழமை U. S. A பயணம்



July 31 to August 06 Prince Edward Island சுற்றுலா

New York City சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், Shopping.

Vancouver & West Cost 14 days

August Civic Holiday Long Weekend

Plan Your Holiday Around These Dates

இவ்வாண்டு விடுமுறைக்கான பயண ஒழுங்குகள் ஏராளம் நீங்கள் தயாரா?

விபரங்களுக்கு: 416-609-2542